www.padippakam.com

# மார்க்சிஸ்ட்



தத்துவ மாத இதழ்

நவம்பர்
1999

விலை ரூ. 5.00

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மார்க்சிஸ்ட்

தத்துவ மாத இதழ்

தொகுப்பு: 11 இதழ்: 5 நவம்பர் 1999

## ஆசிரியர் குழு

பி.ஆர்.பரமேஸ்வரன் (ஆசிரியர்)
டி.லட்சுமணன் (பொறுப்பாசிரியர்)
ஜி.ராமகிருஷ்ணன்
மைதிலி சிவராமன்
அருணன், பாலு

விமர்சனங்கள், கருத்துக்கள், கடிதங்கள்
எழுதவேண்டிய முகவரி:

ஆசிரியர், மார்க்சிஸ்ட் மாத இதழ்,
11, வைத்தியராம் தெரு, தி.நகர்,
சென்னை _ 600 017

வெளியிடுபவர்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் என்.வரதராஜன்,
அச்சிடுபவர் : என்.ராஜாத்தி, நீட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 002
Registered with the Registrar of Newspaper for India under Registration No: 1513/89

படிப்பகம்

www.padippakam.com

1. பகத்சிங்கின் வெடிகுண்டுப் புரட்சி
-எஸ்.ஏ.பெருமாள் 3

2. கீதையின் அடிப்படை
(அ) கீதை காட்டும் தத்துவ அகழி
-சு.பொ.அகத்தியலிங்கம் 41

## சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 5.00 |
| 6மாத சந்தா | ரூ. | 30.00 |
| ஆண்டு சந்தா | ரூ. | 55.00 |

5 பிரதிகளுக்குமேல் ஏஜென்சி வழங்கப்படும்
25 சத கமிசன் உண்டு

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
மார்க்சிஸ்ட் மாத இதழ்
6/16, புறவழிச்சாலை, மதுரை – 625 018
Ph: 661769 Fax: 0452 - 660070
E-Mail : theekati@md3.vsnl.net.in

படிப்பகம்

www.padippakam.com

# பகத்சிங்கின் வெடிகுண்டுப் புரட்சி

- எஸ்.ஏ.பெருமாள்

**லா**லா லஜபதிராயின் படுகொலைக்குக் காரணமான போலீஸ் அதிகாரி சாண்டர்ஸ் படுகொலைக்குப் பின்பு லாகூரில் கடும் அடக்குமுறை கட்ட விழ்த்து விடப்பட்டது. ஏராளமான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு போலீசாரால் சித்ரவதை செய்யப்பட்டனர். சித்ரவதைகளைத் தாங்கமுடியாமல் சில இளைஞர்கள் சாண்டர்ஸ் படுகொலை பற்றிய உண்மைகளைத் தெரிவித்து விட்டனர். பகத்சிங், சந்திசேகர ஆசாத், ராஜகுரு ஆகிய மூவரும்தான் குற்றவாளிகள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட போலீசார் அவர்கள் மூவர் மீதும் கொலை வழக்குத் தாக்கல் செய்தனர். அவர்களை நாடு முழுவதும் தேடும் படலம் துவங்கியது. அம்மூவரையும் காட்டிக் கொடுத்தால் தலா ரூ.5000 வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அரசாங்கம் செய்த விளம்பரங்களால் பொதுமக்கள் அனைவரும் கொலையாளிகள் யார் என்பதை அறிந்துகொண்டனர். அவர்களைத் தங்கள் பிள்ளைகளாய் கருதி "நமது பிள்ளைகள்" லாலாஜி கொலைக்குப் பழிதீர்த்துவிட்டனர் என்று பெருமைப்படக் கூறினர். எனவே தங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு நிதி வசூலித்து வழங்கினர். தொழிலதிபர்கள், வணிகர்கள், சாமான்யர்கள் என அனைவரும் நிதி வழங்கினர். இந்துஸ்தான் சோசலிசக் குடியரசுப் படை இளைஞர்களுக்கு இந்த நிதி பேருதவியாக இருந்தது. வயிறாரச் சாப்பிட வழியின்றி வாடியவர்களுக்கு, கடுங்குளிரில் ஒரு போர்வைகூட இல்லாமலிருந்த விடுதலைப் போராளிகளுக்கு இந்த நிதி வரவு உற்சாக மூட்டியது.

வங்காளப் புரட்சியாளரான யதீந்திரநாத்தாஸ் வெடிகுண்டு செய்வதில் பெரிய நிபுணர். பகத்சிங் அவருடன் பேசி ஆக்ராவுக்கு அழைத்து வந்தார். வாடகைக்கு இருந்த வீட்டிலேயே வெடிகுண்டுகள் செய்தனர். அவற்றைச் சோதித்துப் பார்த்ததில் சக்திமிக்கதாக இருந்தன. வெடிகுண்டுகள் செய்வதை லாகூர், கான்பூர், சகரன்பூர் மற்றும் இரண்டு நகரங்களிலும் விஸ்தரித்தனர். தனது குடியரசுப் படையின் புரட்சி வீரர்களிடம் பகத்சிங் மிகவும் அன்பு


படிப்பகம்

www.padippakam.com

செலுத்தினார். மிகுந்த பாசத்துடன் அவர்களது இன்ப துன்பங்களில் தலையிட்டு உதவினார்.

## மது எதிர்ப்பு

அதேநேரத்தில் அவர்கள் ஒழுங்கு, கட்டுப்பாடுமிக்க புரட்சி ராணுவ வீரர்களாக இருக்க வேண்டுமென்பதை மிகவும் வலியுறுத்தினார். ஒருமுறை போராளி ஒருவர் மது அருந்திவிட்டு முகாமுக்கு வந்தார். பகத்சிங் இதனால் மிகுந்த கோபமடைந்தார். தலைமறைவு வாழ்க்கையில் தங்கியிருந்த அனைத்துப் போராளிகளையும் அழைத்து அமர வைத்தார். குடித்துவிட்டு வந்தவரைக் கடுமையாக கண்டனம் செய்தார். பின்பு பொதுவாக அனைவருக்குமே எச்சரிக்கை செய்தார்.

"நாம் தேசவிடுதலைக்காக நம்மை அர்ப்பணித்துள்ளோம். நாம் தலைமறைவாக வாழ்வது குடித்துக் கும்மாளமிட அல்ல; இன்ப அனுபவங்களைப் பெறவும் நாம் இங்கு வரவில்லை. போராளிகளான நாம் கம்பீரமாக திகழ வேண்டும். நமது ஒவ்வொரு அசைவினையும் பொதுமக்கள் கண்காணித்து வருகிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் ரகசியமாய் செயல்பட வேண்டியவர்கள். இதில் குடிகாரர்களை அனுமதித்தால் நமது ரகசியங்கள் வெளியாகிவிடும். நமக்கு லட்சிய வெறிதான் தேவையே தவிர போதை வெறியல்ல. நாம் நமது தேசத்துக்காக உடலையும், உயிரையும் தருவோமே தவிர மதுவுக்கல்ல என்பதை ஒவ்வொருவருமே நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று போராளிகளிடையே பகத்சிங் பேசினார். அதன்பின் போராளிகள் யாரும் குடிப்பதில்லை.

## புரட்சித் திட்டம்

பகத்சிங், ஆசாத் தலைமையில் இயங்கிய குடியரசுப் படை மிகுந்த தந்திரங்களுடன் இயங்கியது. அவர்கள் கான்பூரில் ஆயுதத் தொழிற்சாலையை ஒரு ஜனநெருக்கம் நிறைந்த பகுதியில் இயக்கினர். "கான்பூர் என்ஜினீயரிங் ஒர்க்ஸ்" என்ற பெயரில் அரசிடம் உரிமம் பெற்று திறப்பு விழாவும் நடத்தினர். துப்பாக்கி, வெடிகுண்டுகளுக்கான வார்ப்புகள், கடைசல்கள் மற்றும் உபகரணங்கள் அங்கு உற்பத்தி செய்யப்பட்டன. தளபதி சந்திர சேகர ஆசாத் இந்த ஆலையின் மேலாளராக இருந்தார். அங்கு பணியாற்றிய தொழிலாளர்களுக்குத் தாங்கள் ஆயுதங்கள் தயாரிக்கிறோம்



படிப்பகம்

www.padippakam.com

என்பதே தெரியாது. விமானத்துக்கோ, கப்பலுக்கோ வேண்டிய உதிரி பாகங்கள் செய்கிறோம் என்று அவர்கள் கருதினார்கள். இத்துடன் செருப்பு ஆணிகளும், லாடங்களும் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்தனர். இதில் லாபமும் கிடைத்தது. யாரும் சந்தேகப்படவும் வாய்ப்பில்லாத நிலையை இது ஏற்படுத்தியது.

சில மாதங்களிலேயே ஏராளமான ஆயுதங்களைத் தயார் செய்துவிட்டனர். பொதுமக்கள் மத்தியில் சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் பிரச்சாரம் செய்தனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கெதிராகப் போர் தொடுக்குமாறு அவர்கள் அறைகூவல் விடுத்தனர்.

*"இந்திய இளைஞர்களே! பேதங்களை மறந்து*
*நாட்டுக்காகத் தியாகம் செய்ய முன்வருக"*
*"மக்களுக்காகத்தான் சுதந்திரம் – அதை*
*மக்கள்தான் வென்றெடுக்க வேண்டும்"*
*"தேசபக்தியற்றவர்கள் அடிமைகளாகவே*
*செத்துமடிவர்; போரிட முன் வாரீர்"*
*"மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் புரட்சியே*
*நாட்டிற்குச் சிறந்த எதிர்காலத்தைத் தரும்"*
*"சமத்துவ சமுதாயம் அமைந்திட –*
*எல்லோர்க்கும் எல்லாமும் கிடைத்திட*
*நாட்டின் விடுதலையே மருந்தாகும்"*
*"தங்கள் தாயகத்தின் வெற்றிக்காக*
*இளம் துருக்கியர்களும், இளம் சீனர்களும்,*
*ரஷ்யர்களும் தியாகம் செய்தனர். அவர்களைப் போல்*
*நாமும் அதற்காக அணிவகுப்போம்."*

இவைபோன்ற வாசகங்கள்தான் சுவரொட்டிகளிலும், துண்டுப் பிரசுரங் களிலும் இருந்தன. இவை மக்களிடம் விடுதலை ஆவேசத்தைத் தூண்டின.

## அடக்குமுறை மசோதா

இந்துஸ்தான் சோஷலிஸ்ட் குடியரசுப் படை ஒரு பெரும் மக்கள் யுத்தத் துக்கு முஸ்தீபுகள் செய்து கொண்டிருந்த இந்தக்காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சி யாளர்கள் வேறு சதிகளில் ஈடுபட்டிருந்தனர். இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்கள் அவர்களைக் கதி கலங்க வைத்தது. எனவே


படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் தொழில் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் "பொதுப்பாதுகாப்பு மற்றும் தொழில் தகராறுகள் மசோதா" (Public Safety and Trade Disputes Bill)வைக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்தனர். இம்மசோதாவைச் சட்டமாக்க 1929 ஏப்ரல் மாதம் டில்லி சட்டசபையில் வைக்கவும் முடிவு செய்தனர்.

(அந்தக்காலத்தில் டில்லி நாடாளுமன்றத்தை பிரிட்டிஷார் சட்டசபை என்றே அழைத்தனர். ஏனெனில் அவர்களது நாடாளுமன்றம் லண்டனில் இருந்தது. அவர்களது காலனி நாடுகளில் அதை சட்டசபை என்றே அழைத்தனர். நாம் இங்கு அதை நாடாளுமன்றம் என்றே அழைப்போம்)

தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளைப் பறித்து, அவர்களது போராட்டங்களை அடக்கி ஒடுக்கவே தொழில் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத்தை எதிர்த்து பம்பாய், கல்கத்தா, கான்பூர், அலகாபாத் போன்ற நகரங்களில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கினர். எஸ்.ஏ.டாங்கே, முசாபர் அகமது, எஸ்.வி.காட்டே போன்ற 19 தலைவர்களை ஆட்சியாளர்கள் கைது செய்து சிறையிலடைத்தனர். தலைவர்களைச் சிறையிலடைத்துவிட்டு அடக்குமுறைச் சட்டத்தை நிறைவேற்ற அவர்கள் துடித்தனர்.

இந்நிலையில் அடக்குமுறைச் சட்டத்தை எதிர்க்கவும், அதன்மீது இந்திய மக்களின் கோபத்தைக் கிளறவும், உலக மக்களின் கவனத்தை ஈர்க்கவும் கருதியது. இதுகுறித்து விவாதிக்க டில்லியில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டது. டில்லியில் சுசீலா என்ற போராளி இருந்தார். இவர் ஒரு ஆசிரியை. இவரைப் போராளிகள் அனைவரும் சுசீலா அக்கா என்று அழைப்பர். டில்லியில் சுசீலா அக்கா வீட்டில் 1929 ஏப்ரல் முதல்வாரத்தில் இந்துஸ்தான் சோசலிச குடியரசுப் படையின் தலைவர்கள் ஒன்று கூடினர்.

இக்கூட்டத்தில் பகத்சிங், சந்திரசேகர ஆசாத், பகவதி சரண், துர்க்காதேவி, சுசீலா, பூதகேஸ்வர்தத் மற்றும் இருவர் ஆக மொத்தம் எட்டுத் தலைவர்கள் கூடினர். இக்கூட்டத்தில் பகத்சிங் ஒரு அறிக்கை சமர்ப்பித்துப் பேசினார்.

"வெள்ளையராட்சி நிறைவேற்றவிருக்கும் இப்புதிய தொழில் பாதுகாப்புச் சட்டம் கொடூரமானது. அது இந்திய உழைப்பாளி மக்களை அடிமைகளாக்கும் சட்டமாகும். இச்சட்டத்தை உழைப்பாளிகளும் இந்திய மக்களும் கடுமையாக எதிர்க்கிறார்கள். ஆனால் அதையும் மீறி வெள்ளையராட்சி இந்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்போகிறது. இந்தக்



படிப்பகம்

www.padippakam.com

கருப்புச் சட்டத்தை எதிர்த்து நமது கடும் எதிர்ப்பை இந்திய மக்கள் சார்பில் பதிவு செய்ய வேண்டும். நாடாளுமன்றத்திற்குள் நமது விடுதலைக்குரல் ஒலிக்க வேண்டும். நமது முழக்கம் உலகம் முழுவதும் எதிரொலிக்க வேண்டும். நமது நடவடிக்கை விடுதலைப்போரின் திருப்பு முனையாக அமைய வேண்டும். நாம் தயாரித்து வைத்துள்ள வெடிகுண்டுக்கு இப்போது வேலைவந்துவிட்டது" என்று பகத்சிங் குறிப்பிட்டார்.

பகத்சிங் இவ்வாறு கூறியவுடன் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் மிகுந்த உற்சாகத்துடன் நாடாளுமன்றத்தை வெடிகுண்டு வீசித் தகர்க்க வேண்டுமென்று கூறினர். ஆனால் பகத்சிங் அவர்களது கூற்றை நிராகரித்தார். நாடாளுமன்றத்தைத் தகர்க்கவோ, மனிதர்களைக் கொல்லவோ நாம் குண்டு வீசக்கூடாது என்றார் பகத்சிங். மேலும் சிங்கத்தை அதன் குகைக் குள்ளே சென்று பிடரியைப் பிடித்து உலுக்குவது போல நமது செயல் இருக்க வேண்டும் என்று கூறினார்.

"இடி முழக்கம்தான் செவிடர்கள் காதில் விழும் என்று பிரெஞ்சுப் புரட்சி யாளர்கள் கூறினார்கள். அதைத்தான் நாம் இப்போது செய்ய வேண்டும். நாம் குண்டுகள் வீசிப் படுகொலைப் போர் நடத்தப்போவதில்லை. குண்டு முழக்கத்தோடு நமது சமநீதி லட்சியத்தை ஒலித்துப் புரட்சியைப் பிரகடனம் செய்யப்போகிறோம்" என்று பகத்சிங் மேலும் விளக்கமளித்தார்.

## பகத்சிங் தேர்வு

புரட்சிக் குழுக்களைப் பற்றி "அவர்கள் பயங்கரவாதிகள், வன்முறை யாளர்கள், கொலைகாரர்கள்" என்ற கருத்து ஒரு கணிசமான மக்கள் பகுதியில் இருந்தது. பொதுமக்களிடம் இருந்த அந்தத் தவறான கண்ணோட்டத்தைப் போக்குவதற்காகவே புரட்சியாளர்கள் புது வகையான முடிவெடுத்தனர். நாடாளுமன்றத்தில் வெடிகுண்டு வீசி, தாங்களே போலீசாரிடம் ஆஜராகி, நீதிமன்றத்தில் தங்கள் கருத்துக்களையும், லட்சியங்களையும் பிரச்சாரம் செய்வது என்பதே அந்த வழிமுறையாகும். அதன்மூலம் சுரண்டலற்ற புதிய சமூகத்தைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதும் அவர்களது நோக்கமாக இருந்தது.

உயிரைப் பணயம் வைக்கும் இந்தப் போராட்டத்திற்கு யாரேனும் இருவர் சென்றால் போதும் என்று முடிவெடுக்கப்பட்டது. புரட்சியாளர்கள் அனை வருமே தங்கள் பெயரை முன்மொழிந்தனர். பகத்சிங் இதில் அனைவரையும்


படிப்பகம்

www.padippakam.com

முந்திக் கொண்டார். ஆனால் சந்திரசேகர ஆசாத் அந்த யோசனையை நிராகரித்தார். பகத்சிங் இதில் ஈடுபட்டுப் போலீஸ் கையில் சிக்கினால் இயக்கம் தலைமைதாங்க ஆளில்லாமல் போகும் என்று ஆசாத் கூறினார். பின்பு பூதகேஸ்வர்தத், விஜயகுமார்சிங் ஆகிய இருவரும் அதற்கெனத் தேர்வு செய்யப்பட்டனர்.

எதிலும் கொஞ்சம் அவசரக்காரரான சுகதேவ் அந்தக் கூட்டத்திற்கு மிகவும் தாமதமாக வந்தார். கூட்ட முடிவைக் கேட்டுவிட்டு சுகதேவ், பகத்சிங் தான் அந்தச் செயலுக்குத் தலைமை ஏற்கவேண்டுமென்றார். நமது கொள்கைகளை பகத்சிங் மட்டுமே தெளிவாகப் பிரச்சாரம் செய்ய முடியும் என்றும் கூறினார். பின் பகத்சிங்கை நோக்கி "சாவுக்கு நீ அஞ்சித்தான் பின்வாங்குகிறாய்" என்று சுகதேவ் ஆத்திரமூட்டினார். பகத்சிங் கோபமடைந்து "நீ என்னை மிகவும் அவமதிக்கிறாய்" என்று கர்ஜித்தார். பின்பு பகத்சிங் நிர்பந்திக்கவே, மீண்டும் கூட்டம் கூடி நாடாளுமன்றத்திற்கு பகத்சிங்கும், பூதகேஸ்வர்தத்தும் செல்வது என்று முடிவெடுக்கப்பட்டது.

குண்டு வீசுவது ஆபத்தான செயல்தான். அன்றையச் சூழலில் பிடிபட்டால் மரண தண்டனை உறுதிதான். அதிலும் குண்டு வீசிவிட்டு ஓடிவிடுவதாலோ அல்லது தற்கொலை செய்வதாலோ எந்தப் பயனுமில்லை. குண்டு முழக்கத்தோடு தங்கள் லட்சிய முழக்கம் பொதுமக்களின் செவிப் பறைகளை எட்ட வேண்டும். எனவே அதை, தானே முன்னின்று செய்ய வேண்டும் என்பதில் பகத்சிங் உறுதியாக இருந்தார். எனவேதான் இச் செயலில் பகத்சிங்கை பலிகொடுக்க அனைவரும் சம்மதித்தனர். ஆயினும் சந்திரசேகர ஆசாத்தும், பகவதி சரணும் மட்டும் கடைசிவரை இம்முடிவை மனமார ஏற்கவில்லை. ஏனெனில் அவர்கள் பகத்சிங்கை வெளிநாடுகளுக்கு அனுப்பி ஆதரவு திரட்டுவது, ஆயுதங்கள் பெறுவது என்ற முடிவில் இருந்தனர். அது நிறைவேறாத ஆசையாகிவிட்டது.

## வெடிகுண்டு வீச்சு

பகத்சிங்கும், பி.கே.தத்தும் 1929ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6, 7, 8 ஆகிய மூன்று தினங்கள் நாடாளுமன்றத்திற்குள் பார்வையாளராக செல்ல அனுமதிச் சீட்டு பெற்றனர். அதை ஒரு காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மூலமே பெற்றிருந்தனர். 6ந்தேதியே இருவரும் நாடாளுமன்றத்திற்குள்ளே சென்று, பார்வையாளர்கள் பகுதியில் எங்கு அமர்வது, எங்கு குண்டு வீசுவது



படிப்பகம்

என்று முடிவு செய்து கொண்டனர். அவர்கள் மிகவும் உயர்ரக ஆடைகளை அணிந்து சென்றதால் நாடாளுமன்றத்தில் யாருக்கும் சந்தேகம் ஏற்பட வில்லை. 6, 7 தேதிகளில் நோட்டமிட்டுவிட்டு 8ந்தேதி குண்டுவீச முடிவு செய்தனர்.

டில்லியில் சுசீலா அக்கா வீட்டிலேயே இருவரும் தங்கியிருந்தனர். அங்கு பகவதிசரண் மனைவி துர்க்காதேவியும் இருந்தார். துர்கா ரசகுல்லா தயாரித் திருந்தார். பகத்சிங், துர்காவின் குழந்தையைத் தூக்கி, கொஞ்சி விளையாடி மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தார். மதிய உணவை அருந்தி முடித்ததும் பகல் ஒரு மணிக்கு நாடாளுமன்றத்திற்கு கிளம்பினர். சுசிலா அக்காவும், துர்காதேவியும் இருவரையும் வாழ்த்தி வழியனுப்பினர். அவர்கள் ஆடம் பரமான மேல்நாட்டு உடையணிந்து நாடாளுமன்றத்திற்குள் சென்று பார்வையாளர் காலரியில் அமர்ந்தனர்.

பொதுப் பாதுகாப்பு மற்றும் தொழில் தகராறுகள் மசோதா (Public safety and Trade Disputer Bill)வை பிரிட்டிஷ் வைஸ்ராய் ஏற்கெனவே பிரகடனம் செய்திருந்தான். அந்த மசோதா நாடாளுமன்ற ஒப்புதலுக்காக தாக்கல் செய்யப்பட்டது. நாடாளுமன்றத்தைச் சுற்றி பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. வட்ட வடிவிலான நாடாளுமன்றக் கூடத்தைப் பார்வையாளர் காலரியில் இருந்து கீழே பார்த்தபோது பகத்சிங்குக்கு அது ஒரு பாழுங்கிணறு போலவும், அதனுள்ளே தவளைகள் கத்துவது போலவும் தெரிந்ததாம்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுந்து பேசுவதும் அவைத் தலைவரை தலைசாய்த்து வணங்கி அமருவதுமாய் இருந்தனர். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தனர். மோதிலால் நேரு, மதன்மோகன் மாளவியா, வித்தல்பாய் பட்டேல் முதல் வரிசையில் அமர்ந் திருந்தனர். நாடாளுமன்ற அவைத் தலைவர் வி.ஜே.பட்டேல் கண்களை மூடியவாறு அமர்ந்திருந்தார். வைஸ்ராய் அமருமிடத்தில் பிரிட்டிஷ் ஆட்சி நியமித்த விசாரணை கமிசன் தலைவர் சர் ஜான்சைமன் அமர்ந்திருந்தார்.

பகத்சிங்கும், பி.கே.தத்தும் வெடிகுண்டையும் கைத்துப்பாக்கிகளையும் தயார் நிலையில் வைத்துக் கொண்டனர். செவிடர்களுக்கு உரத்த சத்தம் போட்டுத் தெரிவிக்கும் தருணம் வந்துவிட்டது. வைஸ்ராயின் பிரகடனத்தை சர் ஜார்ஜி சூஸ்டர் அறிவிக்க எழுந்தார். பகத்சிங்கும் தத்தும் நாடாளுமன்றத் திற்குள் வெள்ளை அரசின் பெரிய அதிகாரிகள் அமர்ந்திருந்த பகுதியில்

www.padippakam.com

ஆளுக்கொரு குண்டை வீசினர். வெடிகுண்டு வெடித்ததில் பெரும் சத்தம் அனைவரையும் அதிரவைத்து விட்டது. குண்டுகள் வெடித்த இடத்தில் தரை பள்ளமாகி, பெஞ்சுகள் நொறுங்கின. ஒரே புகை மண்டலமாகி கூச்சலும், அலறலுமாய் இருந்தது. வெள்ளையர்கள் உயிருக்குப் பயந்து வெளியே ஓடினர். சிலர் குள்ளநரிகளைப் போல ஆசனங்களுக்கடியில் பதுங்கினர். சிலர் கழிப்பறைகளை நோக்கி ஓடினர். பார்வையாளர்களும் பயந்து வெளியே ஓடினர்.

சம்பவங்கள் இப்படித் தொடர்ந்தபோது மோதிலால் நேரு, மாளவியா, வித்தல் பாய் பட்டேல் மூவரும் அதிர்ந்துபோய் அமர்ந்திருந்தனர். வித்தல் பாய்பட்டேல், தனது செவிட்டு மிஷினை சரி செய்தவாறு மோதிலாலிடம் "மோதிலால் ஜீ இங்கே என்ன கலாட்டா" என்று கேட்டார். அதற்கு மோதிலால் நேரு "நமது பையன்கள் ஏதோ விளையாடுகிறார்கள் போலிருக்கிறது" என்று பதிலளித்தார்.

இடியோசையும் புகை மண்டலமும் போலீசாரை செய்வதறியாது திகைக்கவைத்துவிட்டது. அவர்கள் தங்கள் வாயில் விசில்களைப் பொருத்தி ஊதினார்கள். எங்கும் ஒரே பதட்டமாக இருந்தது.

"இன்குலாப் ஜிந்தாபாத்" (புரட்சி ஓங்குக)

"பிரிட்டிஷ் இம்பீரியலிசம் டவுன் டவுன்" (பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒழிக) என்ற கோஷங்களை பகத்சிங்கும், தத்தும் முழங்கிக் கொண்டேயிருந்தனர். அந்த இரண்டு இளைஞர்களும் மேல்நாட்டு உடையில் மிக அழகாகக் காட்சியளித்தார்கள். இருவர் கையிலும் கைத்துப்பாக்கி இருந்தது. வீர முழக்கமிட்ட இருவரும் சிவப்பு நிறத்தில் அச்சிட்ட நோட்டீஸ்களை நாடாளுமன்றத்திற்குள் வீசினார்கள். அவை சிவப்புப் பறவைகளைப் போல் பாய்ந்து பறந்தன.

அந்தச் சிவப்பு நோட்டீஸில் "செவிடர்களுக்கு உரத்த குரலில் உணர்த்துகிறோம்" என்ற தலைப்பில் பின்வரும் வாசகங்கள் இருந்தன.

"எங்களது இந்தச் செயலை நியாயம் என்று உறுதியாய் தெரிவிக்கிறோம்".

"மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தம் எனும் பெயரால் இழைக்கப்பட்ட வரலாற்றுக் கொடுமைகள் இன்னும் மாறவே இல்லை. சைமன் கமிசனிடமிருந்து சலுகைகளை இந்திய மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கும்போது இருக்கிற உரிமைகளையும் பறிக்கும் அவமானகரமான சட்டம் இங்கு நிறைவேற்றப்படுகிறது".



படிப்பகம்

www.padippakam.com

"பொது பாதுகாப்பு மற்றும் தொழில் பாதுகாப்பு என்ற பெயரால் இந்த நாடாளுமன்றக் கூட்டத்தில் அடக்குமுறைச் சட்டம் இயற்றுவதை அனுமதியோம். அடுத்த கூட்டத்தில் பத்திரிகை மசோதா என்ற பெயரில் கருத்துச் சுதந்திரத்தையே பறிக்கும் கொடுமையான சட்டம் தாக்கல் செய்யப்படவிருப்பதையும் நாங்கள் அறிந்தோம்".

"தொழிற்சங்கத் தலைவர்களைப் பாதுகாப்புக் கைதிகளாகச் சிறைப்பிடித்திருப்பது நாளை வரவிருக்கும் கொடுமைகளை எங்களுக்கு இப்போதே உணர்த்துகிறது".

"பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் இந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளின் காரணமாக எங்கள் இந்துஸ்தான் சோசலிசக் குடியரசுப் படை தனது முழுப் பொறுப்பையும், கடமைகளையும் உணர்கிறது. பிரிட்டிசாரின் கொடுமைகளைத் தடுக்கத் தனது படை வீரர்களுக்கு அது ஆணையிட்டுள்ளது. அதன்படிதான் இந்த நடவடிக்கை (நாடாளுமன்றத்தில் வெடிகுண்டுகள் வீசுவது) மேற்கொள்ளப்பட்டது".

"அந்நிய ஏகாதிபத்தியச் சுரண்டல் பேர்வழிகள் தாங்கள் நினைத்ததைச் செய்யட்டும். அவர்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவோம்".

"மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமையை ஒழிப்போம். அனைவருக்கும் சுதந்திரம் வழங்கும் மகத்தான புரட்சியின் உதயத்துக்காக தனிப்பட்ட நபர்களின் தியாகங்கள் அவசியமானவை, தவிர்க்க முடியாதவை ஆகும்".

"மனித வாழ்க்கையின் உன்னதங்களை உணர்ந்தவர்கள் நாங்கள். நாங்கள் மனிதனின் உண்மையான சுதந்திரத்தையும் முழுமையான சமாதானத்தையும் அனுபவிக்கும் மகத்தான எதிர்காலம் பற்றிக் கனவு காணுகிறோம். ஏகாதிபத்தியத்தால் நிர்ப்பந்திக்கப்பட்டு நாங்கள் மனித ரத்தத்தைச் சிந்த வைத்தோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். அதற்காக வருந்துகிறோம்".

"இந்த மன்றத்துப் பிரதிநிதிகள் தங்கள் தொகுதிகளுக்குச் சென்று மகத்தான சமூகப் புரட்சிக்கு மக்களைத் தயார் செய்யட்டும்"

"லாலா லஜபதிராயின் கொடுமையான படுகொலைக்கு எதிராக, அனாதையாக நிற்கும் இந்திய பாமர மக்களின் சார்பில் - வரலாற்றில் அடிக்கடி உணர்த்தப்படும் பாடத்தை இப்போது நாங்கள் உணர்த்தியிருக்கிறோம். இதை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் உணரட்டும்"

www.padippakam.com

இன்குலாப் ஜிந்தாபாத்!
இம்பீரியலிசம் டவுன்டவுன்
(ஒப்பம்) பால்ராஜ்
கமாண்டர் இன் சீஃப்,
இந்துஸ்தான் சோசலிசக் குடியரசுப் படை

இவ்வாறு அந்தச் சிவப்பு நோட்டீஸில் குறிப்பிடப்பட்டிருந்தது. லாகூரில் போலீஸ் அதிகாரி சாண்டர்ஸ் படுகொலைக்குப் பின்பு வெளியிட்ட பிரகடனம் போலவே இதுவும் இருந்தது.

பகத்சிங்கும், தத்தும் நாற்காலிகள் மீது நின்று கோஷமிட்டவாறு நோட்டீஸ்களை வீசினர். இருவர் கரங்களிலும் கைத்துப்பாக்கிகள் இருந்தன. போலீசார் இவர்களை நோக்கி மெதுவாக வந்தனர். இருவரும் நினைத்திருந்தால் போலீசாரைச் சுட்டு வீழ்த்தி விட்டுத் தப்பியிருக்க முடியும். ஆனால் அவர்கள் கம்பீரமாக கோஷமிட்டவாறு நின்றனர். பயந்து நடுங்கியவாறு போலீஸ் சார்ஜென்டுகள் இருவரும் மற்ற போலீசாரும் பக்கத்தில் வந்தனர். பகத்சிங்கும் தத்தும் தங்கள் கைத்துப்பாக்கிகளை அவர்கள் முன்னால் வீசி விட்டுத் தங்கள் கைகளை முன்னால் நீட்டினர்.

போலீசார் பயம் நீங்கி இருவர் கைகளிலும் விலங்கு மாட்டிக் கைது செய்தனர். போலீசார் அவர்கள் இருவரின் பெயரைக் கேட்டனர். பகத்சிங் தங்கள் இருவரின் பெயர்களையும் கூறியதும் போலீசார் பயந்தவாறே அவர்களை வெளியே அழைத்துச் சென்றனர். "இன்குலாப் ஜிந்தாபாத் - பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒழிக" என்று நாடாளுமன்றமே அதிரும்படி கோஷமிட்டவாறு இருவரும் நடந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்களும், போலீசாரும் ஒருவித பீதியோடு பார்த்தவாறு நின்றனர்.

மறுநாள் எல்லாப் பத்திரிகைகளிலும் பகத்சிங், தத் இருவரின் தீரச் செயல்களைப் பற்றி அவர்களது புகைப்படங்களோடு வெளியிட்டன. அவர்கள் இருவரையும் பற்றிய முழு விபரங்கள், வாழ்க்கைக் குறிப்புகள், அரசியல் நோக்கம் பற்றி பத்திரிகைகள் விலாவாரியாக எழுதியிருந்தன.

"அவர்கள் இருவரும் விரும்பியிருந்தால் வெடிகுண்டுகளால் நாடாளுமன்றத்தையே தகர்த்திருக்க முடியும்; குண்டு வீசிய பின் தப்பிச் சென்றிருக்கவும் முடியும். ஆனால் இருவரும் துண்டுப் பிரசுரங்களை வீசி யாருக்கும் சேதமேற்படாமல் வெடியோசை மட்டுமே கிளப்பும் குண்டை மட்டுமே வீசினர். பின்பு கோஷமிட்டவாறு தங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டு



படிப்பகம்

www.padippakam.com

விட்டு போலீசாரிடம் தாங்களாகவே முன் வந்து கைதாயினர்" என்பதைப் பத்திரிகைகள் நாடு முழுவதும், உலக முழுவதும் பறைசாற்றியிருந்தன.

நான்கு மாதங்களுக்கு முன்பு லாலாலஜபதிராயை அடித்துக் கொன்ற சாண்டர்ஸ் என்ற போலீஸ் அதிகாரியை புரட்சிக்கார இளைஞர்கள் சுட்டுக் கொன்றனர். அதில் அதிர்ந்து போயிருந்த பிரிட்டிஷ் ஆளும் வர்க்கம் நாடாளுமன்றத்தில் வெடி குண்டு வீசப்பட்டதில் பேரதிர்ச்சியடைந்திருந்தது. ஆனால் இந்தச் செய்திகளைப் படித்த இந்திய மக்கள் பெரும் மகிழ்ச்சி யடைந்தனர். பகத்சிங்கையும், தத்தையும், தங்கள் பிள்ளைகளாக, சகோதரர் களாக, குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக வரித்து நேசித்தனர்.

புரட்சிக்காரர்கள், பயங்கரவாதிகள், அரசியல் படுகொலை புரிபவர்கள் என்று ஏற்கெனவே பிரச்சாரம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இந்த வெடி குண்டு வீச்சு சம்பவம் அந்தக் கருத்தைத் தகர்த்தெறிந்தது. மக்களுக்கு விடுதலைப் போராட்டத்தின் மீது அக்கறை பிறக்கவும், அவர்களது கவனத்தை ஈர்க்கவும் மட்டுமே நமது பிள்ளைகள் நாடாளுமன்றத்தின் மீது குண்டு வீசினார்கள் என்று நாடு முழுவதும் ஒரே பேச்சாக இருந்தது. அந்த இரு இளைஞர்களும் ஒரே நாளில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பிரபலமடைந்துவிட்டனர்.

இந்தியாவின் மூலை முடுக்குகளில், கிராமங்களில், குக்கிராமங்களில்கூட பகத்சிங்கின் புகழ் பரவியது. ஒரே நாளில் பிரபலமாகிவிட்ட பகத்சிங் பற்றி மக்கள் மத்தியில் சாகசக் கதைகள் கூறப்பட்டன. பாடல்கள் புனைந்து பாடப் பட்டன. தமிழகக் கிராமங்களில் கூட நாடகம் மற்றும் கூத்துக் கலைஞர்கள்

"பகைக்கஞ்சா பாஞ்சாலச் சிங்கமே

எங்கள் பகத்சிங்கமே"

போன்ற பாடல்களைப் பாடினர். முன்பு எப்போதுமில்லாத அளவு மக்களது இயதங்களில் தேசபக்தி கொழுந்துவிட்டு எரியத் துவங்கியது. புரட்சிகர இளைஞர்களை பற்றி காந்தியும், அவரது சகபாடிகளும் வன்முறை யாளர்கள், பயங்கரவாதிகள், கொலைகாரர்கள் என்று கூறி வந்ததை இந்த ஒரே சம்பவத்தின் மூலம் மக்கள் நிராகரித்தனர். இந்திய இளைஞர்களிடம் தாங்கள் ஒவ்வொருவரும் பகத்சிங்குகளாக மாற வேண்டுமென்ற உணர்வும் உத்வேகமும் ஏற்பட்டது.


படிப்பகம்

www.padippakam.com

குறிப்பிட்ட இந்தக் காலகட்டத்தில் விடுதலைப் போராட்ட வீரர்கள் ஆயிரக்கணக்கானோர் சிறைகளில் வாடினர். அந்தமான் தீவுச் சிறையில் சித்ரவதை செய்யப்பட்டனர். அங்கு பலரும் கொல்லப்பட்டனர். தேச பக்தர்களை பிரிட்டிஷ் ஆட்சி சிறைகளில் மிகக் கேவலமான முறையில் நடத்தி அவமதித்தது. காந்தியின் அறவழிப் போராட்டக்காரர்கள், கம்யூனிஸ்டுகள், ஆயுதப் புரட்சியாளர்கள் என்று பலரகமானவர்களும் சிறைச்சாலைகளில் சித்ரவதைகளை அனுபவித்து வந்தனர்.

இந்தப் பின்னணியில்தான் பகத்சிங்கும், பூதகேஸ்வர் தத்தும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். அவர்கள் நாடாளுமன்றத்துக் குள்ளே ஆளில்லாத இடமாகப் பார்த்துதான் இரண்டு குண்டுகளை வீசினார்கள். இதில் எவ்வித உயிர்ப்பலியும் கிடையாது. ஆறு பேருக்கு லேசான காயங்கள் மட்டுமே ஏற்பட்டது. அவர்கள் இருவருக்கும் தனி மனிதர்களைக் கொலை செய்யும் நோக்கம் இல்லவே இல்லை.

## பிரிட்டிஷ் ஆட்சி பதறியது

நாடாளுமன்றத்தில் பகத்சிங் வெடிகுண்டு வீசியது சிங்கத்தை அதன் குகைக்குள்ளேபோய் அதனுடைய பிடரி மயிற்றைப் பிடித்து உலுக்கியது போன்ற செயலாகும். பயந்து மிரண்டுபோன பிரிட்டிஷ் அரசு நாடு முழுவதும் தீவிரவாத இளைஞர்களை வேட்டையாடிக் கைது செய்தது. கைது செய்யப் பட்ட இளைஞர்களை போலீஸ் லாக்கப்புகளிலும், சிறைகளிலும் வைத்துச் சித்ரவதை செய்தது. சித்ரவதைகளைப் பொறுக்க முடியாமல் பலவீனமான இளைஞர்கள் இந்துஸ்தான் சோசலிசக் குடியரசுப் படையின் தளங்கள், ஆயுதத் தொழிற்சாலைகள், தளபதிகளின் பெயர்களைக் காட்டிக் கொடுத்து விட்டனர்.

லாகூர், சகரான்பூர். ஆக்ரா ஆகிய நகரங்களில் செயல்பட்ட வெடிகுண்டுத் தொழிற்சாலைகளைப் போலீசார் கண்டுபிடித்துவிட்டனர். அங்கிருந்த ஆயுதங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. பல முக்கியத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். ராஜகுரு, விஜயகுமார் சிங், யதீந்திரநாத் தாஸ், மகாவீர் சிங், அஜய் குமார் கோஷ், கயா பிரசாத், குந்தன்லால், பிரேம்தத்திவாரி, சன்யால், சிவவர்மா, ஜெயதேவ் ஆகிய முக்கியப் போராளித் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். பின்பு அவர்கள் லாகூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால் தளபதி சந்திரசேகர ஆசாத், பகவதி



படிப்பகம்

www.padippakam.com

சரண், சுகதேவ், யஷ்பால், காளிசரண், சத்குரு ஆகிய ஆறுமுக்கியப் போராளிகள் கைதாகாமல் தலைமறைவாகிவிட்டனர். பகத் சிங், தத் இருவரும் டில்லி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

டில்லி நீதிமன்றத்தில் பகத்சிங், தத் இருவர் மீதும் வெடிகுண்டு வீசிய வழக்கின் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றத்தைத் தங்கள் அமைப்பின் பிரச்சார மேடையாக்குவது குறித்து பகத்சிங் திட்டமிட்டுச் செயலாற்றினார். நீதிமன்றத்திற்கு வரும்போதும், உள்ளே நுழையும் போதும் இருவரும் தங்கள் முஷ்டியை உயர்த்தி புரட்சி ஓங்குக! மக்களாட்சி வருக! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒழிக! என்று கோஷமிட்டனர். ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்திற்கு வரும்போதும் இது நிகழ்ந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் நீதிமன்ற வரலாற்றில் நீதிமன்றத்திற்குள் முஷ்டிகளை உயர்த்தி கோஷமிடுவது இதுவே முதல் முறையாகும். எனவே நீதிமன்றத்திற்குள்ளே யும் இருவருக்கும் கைவிலங்கு பூட்டியே இருக்க வேண்டுமென்று நீதிபதி ஆணையிட்டார்.

## குற்றப்பத்திரிகை

டில்லி செஷன்ஸ் கோர்ட்டில் இருவர்மீதும் போலீஸ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

"நாடாளுமன்றக் கூட்டம் நடக்கும்போது மன்ற உறுப்பினர்களைக் கொலை செய்ய திட்டமிட்டு சதி செய்துள்ளனர். வெடி குண்டுகள் இரண்டை வீசியுள்ளனர். இருவரும் கைத்துப்பாக்கிகள், தோட்டாக்கள், வெடிகுண்டுகள் ஆகிய பயங்கர ஆயுதங்களை வைத்திருந்தனர்; அனைத்திற்கும் மேலாக மேன்மை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியின் ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்தார்கள். எனவே இந்தப் பயங்கரக் குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். உயர்ந்தபட்ச தண்டனை வழங்க வேண்டும்" என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அடுத்த வாய்தாவில் மேற்கண்ட குற்றச்சாட்டுக்கு பகத்சிங் பதிலுரை எழுத்து மூலம் தாக்கல் செய்தார்.

"நாங்கள் டில்லி நாடாளுமன்றத்துக்குள் குண்டுவீசினோம். இது உண்மை யானது. ஆனால் எங்களுக்கு எந்த நாடாளுமன்ற உறுப்பினரையும் கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கம் கிடையாது. நாங்கள் வீசிய குண்டுகள் பெரும் வெடிச்சத்தத்தையும், புகையையும் மட்டுமே வெளிப்படுத்தக்


படிப்பகம்

www.padippakam.com

கூடியவை. அழிவை ஏற்படுத்தும் சக்தி படைத்தவை அல்ல. மேலும் அந்தக் குண்டுகளைக்கூட நாங்கள் ஆள் இல்லாத இடமாகப்பார்த்துத்தான் வீசினோம். எங்கள் நோக்கம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் செவிட்டுக் காதுகளைத் திறப்பதும், அவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதும்தான்".

"மனித குலத்தின் முன்னேற்றத்துக்கான ரகசியம் புரட்சியே ஆகும். உலகின் சட்டம் புரட்சியே; அடிமைத் தளையிலிருந்தும், வறுமைத் துயரங்களி லிருந்தும் மக்களை விடுவிப்பதையே நாங்கள் புரட்சி என்கிறோம். அநீதியான ஏகாதிபத்திய ஆதிக்க அமைப்பினைத் தகர்த்தெறிவதே எங்களது புரட்சியின் நோக்கமாகும்".

"புரட்சிக்கான அந்தப் பலி பீடத்தில் எங்கள் இளமையைப் பறிகொடுக் கவே நாங்கள் நிற்கிறோம். புரட்சியின் வருகைக்காக அந்த வேள்வியில் எங்களை ஆகுதிகளாய் தீயில் சொரிகிறோம். உன்னதமான லட்சியத்திற்காக எங்கள் தியாகம் அற்பமானதுதான்".

"புரட்சி என்பது தனிநபர்களைக் கொலைசெய்யும் ரத்தக்களறி அல்ல. அது வெறும் வெடிகுண்டு துப்பாக்கிப் பூஜையுமல்ல. நாங்கள் கொடிய வர்களோ, இழிவானவர்களோ, கொலை வெறியர்களோ, கொள்ளைக் காரர்களோ அல்ல".

"உலக சரித்திரத்தையும், எங்கள் தாய்த்திரு நாட்டையும், மனிதரின் எதிர் பார்ப்புகளையும் நாங்கள் பயின்றுகொண்டிருக்கிறோம். இதில் எங்களுக்குப் போலித்தனம் ஒருபோதும் இருந்ததில்லை. இந்த நாடாளுமன்றம் அது தோன்றிய காலம் முதல் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதையே தொழிலாகக்கொண்டுள்ளது. எனவே இந்த உதவாக்கரை நாடாளுமன்றத்தின் மீது எங்கள் எதிர்ப்பைக் காட்டவே நாங்கள் குண்டு வீசினோம்".

"வெள்ளையராட்சியின் கொடுமைகளையும், எங்கள் மக்களின் அனாதர வான நிலைமையை உலகுக்கு உணர்த்துவதும், ஆட்சியாளர்களை அம்பலப் படுத்துவதுமே எங்களது நோக்கமாகும். வெடிகுண்டு வீசி எங்கள் மகத்தான சுதந்திரப்புரட்சியை நாங்கள் பிரகடனம் செய்தோம். அதற்காக இந்த நீதிமன்றம் தரும் எந்தத் தண்டனையையும் நிமிர்ந்த நெஞ்சத்தோடு ஏற்றுக் கொள்கிறோம்".

இதுவே பகத்சிங் நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

## மீண்டும் கைதுகள்

பகத்சிங், தத் இருவரும் தங்கள் மீதான குற்றப்பத்திரிகைக்குப் பதிலுரையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததைத் தொடர்ந்து மேலும் பல போராளிகள் கைது செய்யப்பட்டனர். லாகூரிலிருந்து வெடிகுண்டுத் தொழிற் சாலையைப் போலீசார் சோதனையிட்டனர். அங்கு சுகதேவ், கிஷோரிலால், ஜெய்கோபால் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இதில் ஜெய்கோபால் பின்னாளில் மாறி போலீசுக்கு ஆதரவாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அப்ரூவர் ஆக மாறிவிட்டான். லாகூர் வெடிகுண்டுத் தொழிற்சாலையைக் காட்டிக்கொடுத்த இளைஞனின் பெயர் மாலிக் பானர்ஜி ஆகும். இவன் அடிக்கடி தீவிரமாய் பேசக்கூடியவன். வாய்வீச்சுப் பேர்வழி, "வெறும் பேச்சு பலன் தராது, உடனே வெடிகுண்டுகளோடு களமிறங்க வேண்டும்" என்பான்.

மாலிக் பானர்ஜியின் வாய்வீச்சில் ஏமாந்தபோராளிகள் சிலர் அவனை வெடிகுண்டுத் தொழிற்சாலைக்கு அழைத்துச் சென்றனர். அந்த வாய்வீச்சுப் பேர்வழி வெடிகுண்டுகளையும், துப்பாக்கிகளையும் பார்த்தபின்பு பயந்து நடுங்கிவிட்டான். வாய்வீரம் பேசியவன் பின்பு தனக்குப் பயமாயிருக்கிற தென்றும், தன்னைப் புரட்சிக்குழுவிலிருந்து விட்டுவிடுமாறும் கெஞ்சினான். ரகசியங்களைத் தெரிந்துகொண்டுவிட்டதால் போராளிகள் அவனைக் கொன்றுவிட விரும்பினர். ஆனால் பகவதிசரண், சுகதேவ் ஆகியோரின் இரக்க குணத்தால் விடுவிக்கப்பட்டான். பின்பு அவன் கல்கத்தா செல்லும் வழியில் கைது செய்யப்பட்டான். போலீஸ் மிரட்டலுக்குப் பயந்து வெடிகுண்டுத் தொழிற்சாலையைக் காட்டிக்கொடுத்துவிட்டான்.

லாகூர் வெடிகுண்டுத் தொழிற்சாலையைப் போலீசார் சோதனையிட்டனர். அங்கிருந்து எட்டுப்பெட்டிகள் நிறைய வெடிகுண்டுகள், ஒரு துப்பாக்கி, குண்டு செய்யும் முறை, அதைப் பயன்படுத்தும் முறை பற்றிய புத்தகங்கள், வெடிகுண்டு செய்யத் தேவையான மூலப்பொருட்கள், பூதகேஸ்வர் தத்தின் புகைப்படம் ஆகியவை கைப்பற்றப்பட்டன. இவைபோக நாடாளுமன்றத்தில் வெடிகுண்டு வீசுவதற்கு முன்பு பகத்சிங் தனது தோழன் சுகதேவுக்கு எழுதியிருந்த நீண்ட கடிதமும் கைப்பற்றப்பட்டது.

தனது நெருங்கிய சகாவான சுகதேவுக்கு பகத்சிங் எழுதிய அந்தக் கடிதம் அதி அற்புதமானது. நாடாளுமன்றத்தில் பகத் சிங்தான் குண்டு வீச வேண்டும் என்கிற முடிவை எடுக்கவைத்தது சுகதேவ்தான். அதைத் தொடர்ந்து உணர்ச்சி வசப்பட்டு பகத்சிங் அந்தக் கடிதத்தை எழுதினார். அந்தக் கடிதம்


படிப்பகம்

www.padippakam.com

நாடாளுமன்றத்தில் குண்டுவீசுவதற்கு மூன்றுநாட்களுக்கு முன்பாக 5.4.1929ல் எழுதப்பட்டது. அக்கடிதம் டில்லியிலுள்ள சீத்தாராம் பஜாரில் இருந்து பகத்சிங் எழுதி தோழர் சிவவர்மா மூலம் சுகதேவுக்குக்கொடுத்தனுப்பினார். அக்கடிதத்தின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.

அன்புள்ள சுகதேவ்,

"இந்தக் கடிதம் உன்னிடம் சேரும்போது நான் எட்டமுடியாத முடிவை நோக்கிப் பயணமாகியிருப்பேன். வேறு எந்த நாளையும் விட இன்றுநான் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கிறேன். எனது வாழ்வின் எல்லா அழகு, இனிமை ஆகிய அனைத்து நினைவுகளையும் தாண்டி எனது பயணத்துக்கு நான் தயாராகிவிட்டேன். எனது சகோதரன், எனது சொந்தச் சகோதரன் என்னைப் பலவீனமானவன் என்று குற்றம்சாட்டிவிட்டானே என்ற ஒரு விஷயம்தான் எனது நெஞ்சத்தில் நெருடலாக இருக்கிறது. ஆனாலும் அது ஒரு தவறான புரிதலும், தவறான கணிப்புமே ஆகும். நான் பலவீனமானவனோ, நமக்குள் எவரையும் விடப்பலவீனமானவனோ இல்லை சோதரா! நானும் எல்லா ஆசைகளும் நம்பிக்கைகளும் உடையவன்தான்; ஆனால் தேவையானபோது அவைகளை என்னால் உதறியெறிந்துவிடமுடியும். அதுதான் உண்மையான தியாகமாகும். ஒரு போராளியின் வாழ்க்கைப் பாதையில் அந்த விஷயங்களெல்லாம் ஒருபோதும் குறுக்கே நிற்க முடியாது. மனிதரின் குணநலன்கள் பற்றி ஒருமுறை விவாதித்தபோது 'காதல் என்பது எந்த மனிதனுக்காவது உதவி செய்தது என்று நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று நீ என்னிடம் முன்பு கேட்டாய்; அதற்கு இப்போது பதில் சொல்கிறேன்; ஆம்- அது மாஜினிக்கு உதவியிருக்கிறது. அவனது காதலியின் ஒரு கடிதம் இல்லாவிட்டால் அவன் பைத்தியமாகியிருப்பான் அல்லது தற்கொலை செய்துகொண்டிருப்பான். ஆயினும் அவன் எல்லோரையும் விட வலிமையானவன்தானே".

"காதல் ஒருபோதும் மிருக உணர்ச்சியல்ல. காதல் மனிதப்பண்பை உயர்த்துவதாகவே அமைகிறது. அது காதலர்களை என்றும் கீழ்நிலைக்குத் தள்ளுவதில்லை. உண்மையான காதலை யாரும் உருவாக்க முடியாது. அது எப்போது என்றும் கூறமுடியாது. ஏனெனில் அது இயற்கையானது. ஒரு வாலிப ஆணும், வாலிபப் பெண்ணும் தங்கள் உணர்ச்சிகளுக்கு இரையாகாமல் தங்களின் தூய்மையைப் பாதுகாத்துக்கொண்டே ஒருவரை யொருவர் காதலிக்க முடியும் என்பதையும் நான் உனக்குக் கூறிக்கொள்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

நீ இனிய வாழ்வையும், எல்லா வெற்றிகளையும் பெற வாழ்த்துகிறேன். தெளிந்த மனதோடு நான் விடை பெறுகிறேன். நீயும் கூடத் தெளிவு பெற்றிருப்பாய் அல்லவா"

இதுதான் பகத்சிங் தனது நெருங்கிய தோழன் சுகதேவுக்கு எழுதிய கடிதம். ஒரு கம்பீரமான புரட்சிக்காரனின் மென்மையான இதயத்தை இக்கடிதம் நமக்குக் காட்டுகிறது. இக்கடிதத்தை எழுதும் போது தனதுதோழன் சுகதேவ் தன்னோடு தூக்குமேடைக்கு வரப்போகிறான் என்பதை பகத்சிங் கற்பனை கூடச் செய்திருக்க மாட்டார்போலும்.

புரட்சியாளர்களின் வெடிகுண்டுத் தொழிற்சாலைகளில் வெடிகுண்டுகள், துப்பாக்கிகள், சிவப்பு மையில் அச்சிட்ட ஆயிரக்கணக்கான நோட்டீஸ்களும் போலீசாரால் கைப்பற்றப்பட்டன. இவற்றோடு கம்யூனிஸ்ட் இலக்கிய நூல்களும், துண்டுப் பிரசுரங்களும் கைப்பற்றப்பட்டன.

போலீசாரின் சோதனைகளில் கிடைத்த விஷயங்களிலிருந்து அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். லாகூர், கான்பூர், சகரான்பூரில் வெடிகுண்டுகளைத் தயார் செய்தவர்களும், நாடாளுமன்றத்தில் குண்டுவீசியவர்களும் ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைப் போலீஸ் புரிந்துகொண்டது. இந்துஸ்தான் சோசலிசக் குடியரசுப்படையைச் சேர்ந்த 25 பேர் மீது லாகூர் சதி வழக்குத் தொடரப்பட்டது. சரித்திரப் புகழ்பெற்ற இந்த வழக்கு 10.7.1929ல் லாகூர் கோர்ட்டில் துவங்கியது. இதற்கிடையே நாடாளுமன்றத்தில் வெடிகுண்டு வீசிய வழக்கில் பகத்சிங், தத் ஆகிய இருவருக்கும் டில்லி செஷன்ஸ் நீதிமன்றம் ஆயுள்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. சாண்டர்ஸ் கொலை மற்றும் லாகூர் சதி வழக்கு விசாரணைக்காக பகத்சிங்கும், தத்தும் டில்லி சிறையிலிருந்து லாகூர் சிறைக்கு மாற்றப்பட்டனர்.

பகத்சிங் உட்பட 16 பேர் குற்றவாளிகளாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டனர். சந்திரசேகர ஆசாத், பகவதி சரண் உட்பட ஒன்பது பேர்களை போலீசாரால் கைது செய்ய முடியவில்லை. இன்னும் ஏழுபேர் போலீஸ் தரப்பு ஆட்களாக அப்ரூவர்களாக மாறினர். சிறைச்சாலையில் பகத்சிங்கும் அவரது தோழர்களும் அனுபவித்த சித்ரவதைகள் சொல்லி மாளாது. உடல் முழுவதும் ரத்த விளாறுகளாய் அடிக்கப்பட்டனர். மூர்ச்சையாகிக் கீழே விழும்வரை அடித்தனர். இந்தத் தாக்குதல்களின் போது போலீசாருக்கும், புரட்சியாளர் களுக்குமிடையே கைகலப்புகளும் நிகழ்ந்திருக்கிறது. ஆனால் இந்த அடி உதைகளும், சித்ரவதைகளும் புரட்சியாளர்களின் வீரியத்தை அதிகப்


படிப்பகம்

www.padippakam.com

படுத்தியதே தவிரக் குறையவில்லை.

## சிறையில் பட்டினிப்போர்

பிரிட்டிஷாரின் சிறைக் கொடுமைகள் காரணமாக கைதிகள் மரணமடைவது சர்வசாதாரணமான விஷயமாகும். உதாரணமாக 1916ல் பனாரஸ் சதி வழக்கில் பதினோரு கைதிகளில் மூவர் சிறைக்குள்ளேயே கொல்லப்பட்டனர். ஒருவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. கைதிகளைத் தனிக்கொட்டடிகளில் அடைத்து சித்ரவதை செய்வதும், இதனால் கைதிகளின் மனோநிலை பாதிக்கப்பட்டுப் பைத்தியமாவதும் நிறையவே நடைபெற்றுள்ளது.

சிறைகளில் அரசியல் கைதிகள் சித்ரவதை செய்யப்பட்டு அழுகிக் கொண்டிருந்தனர். பகத்சிங் இந்தக் கொடுமைகளுக்கெதிராகப் போராட முடிவு .செய்தார். டில்லி சிறையில் இருந்தபோதே அந்த முடிவுக்கு வந்திருந்தார். கைதிகளை மனிதர்களாக நடத்துவது, அரசியல் கைதிகள் சிறையில் ஒருவரையொருவர் சந்திக்க அனுமதிப்பது, கைதிகளை வெளியிலிருந்து பார்வையாளர்கள் பார்க்க அனுமதிப்பது, கைதிகளுக்கு நல்ல உணவு வழங்குவது, பத்திரிகைகள், புத்தகங்கள் படிக்க அனுமதிப்பது ஆகிய கோரிக்கைகளை பகத்சிங் முன்வைத்தார். இக்கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை தனது தோழர்களுடன் துவக்கினார். இப்போராட்டச் செய்திகளையும், கைதிகளின் கோரிக்கைகளையும் பத்திரிகைகள் பெரிதாய் பிரசுரித்தன.

உண்ணாவிரதப் போராட்டம் ஒரு மாதமாகிவிட்ட பின்பும் தொடர்ந்தது. பட்டினியால் தாக்குப்பிடிக்க முடியாமல் போராட்டத்தை வாபஸ் பெறுவார்கள் என்று எதிர்பார்த்த அரசு ஏமாந்தது, தொடர்ந்து போராட்டத்திற்கு ஆதரவாக மற்ற கைதிகளும் உண்ணாவிரதத்தில் இறங்கினர். லாகூர் கைதிகளின் உண்ணாவிரதம் நாட்டு மக்களின் கவனத்தை மிகவும் ஈர்த்தது. பத்திரிகைகள் தொடர்ந்து செய்தி வெளியிட்டுவந்தன.

உண்ணாவிரதமிருந்தவர்களில் யதீந்திரநாத் தாசின் நிலைமை கவலைக்கிடமாகியது. அவர் எனிமா செய்துகொள்ளவும் மறுத்துவிட்டார். அவர் உடல் முழுவதும் விஷமாகிவிட்டது. காங்கிரஸ் தலைவர்களும், மற்றவர்களும் வேண்டியும் தாஸ் உண்ணாவிரதத்தை விலக்கிக்கொள்ள மறுத்தார். அரசு பகத்சிங்கிடம் பேசி தாஸிடம் எனிமா செய்ய ஒத்துழைக்க வேண்டினர். பகத்சிங் பேசி பின்பு எனிமா செய்யப்பட்டது. அதனால்தான்



படிப்பகம்

www.padippakam.com

தாஸ் மேலும் பதினைந்து நாட்கள் உயிரோடு நீடிக்க முடிந்தது.

இந்நிலையில் சிறைகளின் நிலைமையை ஆராய அரசு ஒருகமிட்டி அமைத்தது. அக்கமிட்டியின் முடிவு விரைவில் அறிவிக்கப்படும் என்று அரசு தெரிவித்தது. அதுவரை தாஸ் உயிரோடு இருக்க வேண்டுமென்று பகத்சிங் விரும்பினார். எனவே தாஸ் மட்டும் உண்ணாவிரதத்தை நிறுத்தி விடலாம் என்று முடிவுக்கு வந்த பகத்சிங் அவரிடம் பேசினார். ஆனால் தாஸ் மறுத்துவிட்டார். அடுத்த சில தினங்களில் யதீந்திரநாத் தாஸ் (63வது நாளில்) மரணமடைந்தார். அவரை இழந்த சோகம் தோழர்களை மிகவும் வாட்டியது. சிறை விசாரணைக்குழு கைதிகளின் கோரிக்கைகளை ஏற்றது. அதைத் தொடர்ந்து உண்ணாவிரதம் வாபஸ் பெறப்பட்டது.

## லாகூர் சதி வழக்கு

லாகூர் சதிவழக்கு விசாரணை துவங்க தேதி குறிக்கப்பட்டது. வழக்கை வக்கீல்கள் வைக்காமல் தாங்களே நடத்துவதென்று முடிவு செய்தனர். வழக்கை நடத்த மூவர் குழு தேர்வு செய்யப்பட்டது. பகத்சிங், விஜயகுமார் சிங், சுகதேவ் ஆகிய மூவருமே அக்குழுவுக்குத் தேர்வு செய்யப்பட்டனர். இந்த வழக்கு மூலமாகத் தங்கள் புரட்சி இயக்கத்தின் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்வதே இக்குழுவின் பிரதான நோக்கமாகும்.

சிறையில் தொடர்ந்த போராட்டங்களின் காரணமாக அரசியல் கைதி களுக்குச் சில வசதிகள் கிடைத்தன. நாற்காலி, மேஜை, பத்திரிகை, எழுது பொருட்களும் ஒழுங்கான உணவும் கிடைத்தது. சதி வழக்கு விசாரணை லாகூர் மத்திய சிறை வளாகத்திற்குள்ளேயே நடந்தது. பார்வையாளர்கள் உள்ளேவந்து வழக்கு விசாரணையைப் பார்க்கத் தடை விதிக்கப்பட்டது. பொதுமக்கள், பார்வையாளர்களாக வரவில்லையென்றால் தங்கள் கொள்கைப் பிரச்சாரத்தைக் கொண்டுசெல்ல முடியாதே என்று பகத்சிங் மீண்டும் போராடப்போவதாய் அறிவித்தார். ஒருமாதத்திற்குப்பிறகு பார்வையாளர் களாக அனுமதிக்க அரசு ஏற்றது. அதன் பிறகே சதிவழக்குக் கைதிகள் விசாரணைக்கு வரச்சம்மதித்தனர்.

வழக்கு விசாரணை துவங்கியது. தினசரி விசாரணைக்கு வரும்போது, "புரட்சி ஓங்குக!, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒழிக!, மக்களாட்சி மலர்க!" என்று புரட்சியாளர்கள் கோஷமிட்டனர். தேசியகீதப் பாடலையும் பாடினர். அதற்குப் பிறகுதான் விசாரணை ஆரம்பமாகும். வழக்கு விசாரணையைப் பார்க்க


படிப்பகம்

www.padippakam.com

ஆயிரக்கணக்கில் ஆண்களும், பெண்களும் வந்தனர். வழக்கு விசாரணையைப் பார்த்த பொதுமக்கள் மிகுந்த உணர்ச்சிவசப்பட்டனர். வக்கீல்கள் வைத்துக்கொள்ளாமல் குற்றவாளிகளே சாட்சிகளையும், அப்ரூவர்களையும் குறுக்கு விசாரணை செய்தனர். தங்கள் இயக்கத்தின் கோட்பாடுகளையும், கொள்கைகளையும் மக்கள் அறியும் முறையில் பகத்சிங்கும் அவரது தோழர்களும் பேசினர். இந்த விசாரணை மூலம் நாட்டின் இளைஞர்கள் வீரமும், உற்சாகமும் பெறவேண்டுமென்று அவர்கள் விரும்பினர். பத்திரிகைகள் தொடர்ந்து இந்த விசாரணைச் செய்திகளை வெளியிட்டுவந்தன.

தங்கள் நோக்கத்தை வெளியிட ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தினர். க்காகோரி தினம், மே தினம், லெனின் தினம், லஜபதிராய் தினம் என்று வழக்கு விசாரணையின்போதே கொண்டாடினார்கள். நீதிமன்றத்தில் ஒருநாள் ஜெயகோபால் (அப்ரூவர்) பகத்சிங்கையும், தோழர்களையும் பார்த்து மீசையை முறுக்கி ஏளனம் செய்தான். அதைப்பார்த்து கைதிகளில் மிகவும் இளையவரான பிரேமதத்தா தனது கால் செருப்புகளைக் கழற்றி ஜெயகோபால் மீது வீசினார். விசாரணை உடனே ஒத்திவைக்கப்பட்டு இனிமேல் கைதிகளை கைவிலங்கிட்டு அழைத்துவர நீதிபதி உத்தரவிட்டார்.

பகத்சிங்கும் மற்றவர்களும் கைவிலங்கு பூட்ட அனுமதிக்கவில்லை. மேலும் அந்த உத்தரவைத் திரும்பப் பெறும் வரையில் நீதிமன்றம் செல்வதில்லை என்றும் தீர்மானித்தனர். போலீசார் மறுநாள் எவ்வளவோ முயன்றும் அவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்துப்போகமுடியவில்லை. பதினைந்து பேரில் ஐவரை மட்டும் லாரியில் தூக்கிப்போட்டுக்கொண்டு போனார்கள். ஆனால் அவர்களையும் லாரியிலிருந்து இறக்கமுடியவில்லை. தொடர்ந்து மறுநாள் நீதிமன்றத்திலும் தகராறு தொடர்ந்தது. கைவிலங்குபோட மறுத்ததும் போலீசாருக்கும், கைதிகளுக்கும் கைகலப்பு ஏற்பட்டது.

பின்பு ராணுவ வீரர்கள் அழைக்கப்பட்டனர். பார்வையாளர்கள் முன்னிலையிலேயே பகத்சிங்கும் தோழர்களும் அடித்து நொறுக்கப்பட்டனர். பூட்ஸ் கால்களால் உதைத்தும், தடியால் அடித்தும் காயப்படுத்தினர். பார்வையாளர்கள் பெரும் குமுறலோடு கலைந்தனர். அன்று மாலையில் லாகூரில் பெரும் கண்டனக் கூட்டம் நடந்தது. போலீசாரின் நடவடிக்கையைக் கண்டித்துப் பலரும் பேசினர். போலீசாரின் அநாகரீகத்தாக்குதலை தேசிய நாளிதழ்களும் கண்டித்து எழுதின. அதற்குப் பிறகும் சிறைக்குள் அவர்கள் அடிக்கப்பட்டனர். சித்ரவதைகளை மிகுந்த தீரத்துடன் அவர்கள் தாங்கிக்கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

லாகூர் சதி வழக்கு இந்தியாவின் மூலைமுடுக்குகள் எல்லாம் பரவியது. வெளிநாடுகளிலும் பரவி பெரும்புகழ் பெற்றது. வழக்குக்காக நிதியுதவிகளும் குவிந்தன. போலந்து நாட்டிலிருந்து ஒரு பெண் பணம் அனுப்பி, தனக்கு வழக்கு விபரங்களை அனுப்புமாறு கேட்டிருந்தார். கனடா, ஜப்பான், தென் அமெரிக்காவிலிருந்துகூட நிதியுதவி வந்தது. பகத்சிங் படமும் மற்ற தோழர்களின் படங்களும் பத்திரிகைகளில் வந்தன. அவை சட்டமிடப்பட்டு வீடுகளில் நாடு முழுவதும் தொங்கவிடப்பட்டன. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், கே.எப்.நாரிமன், அகமத் கித்வாய், பண்டிட் மோதிலால் நேரு போன்ற பெரும் தலைவர்கள் பகத்சிங்கையும், தோழர்களையும் நீதிமன்றத்தில் சந்தித்துப் பேசினர். மோதிலால் நேரு பகத்சிங்கை இருமுறை சந்தித்து நீண்ட நேரம் பேசினார்.

## ஒரு தந்தையின் சோகம்

லாகூர் சதிவழக்கினால் நாடு முழுவதும் பகத்சிங் பெயரால் இளைஞர்கள் மத்தியில் பெரும் எழுச்சி ஏற்பட்டது. இளைஞர்களின் உணர்ச்சி வேகத்தைக் கண்டு பிரிட்டிஷ் அரசு அஞ்சியது. உடனே அவசரச் சட்டம் பிறப்பித்தது. லாகூர் சதிவழக்கு அவசரச் சட்டம் என்ற பெயரில் அதை பிரகடனம் செய்தது. வழக்கை விசாரிக்க அவசரச் சட்டத்தின்படி தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டது. வழக்கம்போல பகத்சிங்கும் தோழர்களும் தனி நீதிமன்றத்திலும் கோஷமிட்டு, தேசிய கீதம் பாடினர். தனி நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகளும் அதைப்பொறுக்கமுடியாமல் கைதிகளுக்கு விலங்கிடுமாறு உத்தரவிட்டனர். மீண்டும் பழைய மாதிரியே அடிதடியும் கைகலப்பும் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து போராளிகள் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராக மறுத்தனர்.

நீதிபதிகளும் அரசாங்கமும் கைதிகள் விசாரணையில் பங்கேற்க வேண்டுமென்று எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. நாங்கள் நியாயமாக விசாரணை நடத்துகிறோம் என்று உலகத்திற்கு காட்டிக் கொள்ளவே அரசு போராளிகளிடம் பேசிப்பார்த்தது. எந்த முயற்சியும் பலிக்காமல் போகவே அரசு கைதிகளே இல்லாமல் எக்ஸ்பார்ட்டியாக விசாரணையை நடத்தியது. இவ்வாறு அரசு ஒருதலைப்பட்சமாக விசாரிக்கத் துவங்கியதும் பலவிதமாகப் பேச்சுகள் கிளம்பின. பகத்சிங் உட்பட அனைவருக்குமே தூக்குத்தண்டனை விதிக்கப்போகிறார்கள் என்று செய்திகள் பரவின. நாடே கவலையில் ஆழ்ந்தது.


படிப்பகம்

www.padippakam.com

நீதிமன்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்து கவனித்துவந்த பகத்சிங்கின் தகப்பனார் கிஷன்சிங் மிகுந்த கவலையடைந்தார். அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மேலும் பகத்சிங்கின் தாயும், சகோதரியும், தம்பியும் சொல்லமுடியாத சோகத்தில் மூழ்கினர். தேசபக்தரான கிஷன் சிங் வீரமிக்கவர்தான். ஆனால் தனது மகனுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப் படலாம் என்ற அச்சம் அவருக்கு மனத்தளர்ச்சியை உண்டாக்கிவிட்டது. எனவே தனி நீதிமன்றத்திடம் தனது மகன் பகத்சிங்குக்கு தூக்குத்தண்டனை வழங்காதிருக்கக்கோரியும், உயிர்ப்பிச்சையளிக்கக்கோரியும் கிஷன் சிங் மனுதாக்கல் செய்தார்.

கிஷன்சிங் சிறப்பு நீதிமன்ற நீதிபதிகளுக்கு எழுதிய கருணை மனு விபரம்:

"என் மகன் பகத்சிங் ஒரு நிரபராதி. அவன் எந்தக் குற்றமும் செய்ய வில்லை. போலீஸ் அதிகாரி சாண்டர்ஸ் கொலை செய்யப்பட்ட தினத்தில் என் மகன் லாகூரிலேயே கிடையாது. அவன் அப்போது கல்கத்தாவிலிருந்தான். அவசியமானால் நான் அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

என் மகன் பகத்சிங் தீவிரமான அரசியல் கருத்துக் கொண்டவன்தான். அதற்காக அவனைத் தூக்கில் போட்டால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கும், பாரம்பரியமான ஆங்கிலேய இனத்துக்கும் மிகப்பெரிய அவமானமாகும். அந்த அவமானத்தை ஏழு சமுத்திரங்களில் குளித்தாலும் கழுவ முடியாது.

என் மகன் பகத்சிங் அறியா வயது இளைஞன். குற்றமற்ற நிரபராதி, என் குடும்பத்திற்கு ஒரே வாரிசு. அவனுக்கு உயிர்ப் பிச்சை அளியுங்கள்!

இவ்வாறு கிஷன் சிங் தனது மகனுக்காக நீதிபதிகளிடம் மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொண்டு எழுதியிருந்தார். கிஷன்சிங் நீதிமன்றத்தில் கருணை மனு கொடுத்திருப்பது குறித்து சிறைக்குள் இருந்த பகத்சிங்குக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

## தந்தைக்கு பகத்சிங் கடிதம்

தனது விடுதலைக்காகத் தனது தந்தை தனி நீதிமன்றத்திற்குப் பிரார்த்தித் துக் கடிதம் எழுதியதை அறிந்து பகத்சிங் மிகவும் வருந்தினார். அவர் தனது தந்தையாரின் மீது மிகுந்த பாசமும், நேசமும், மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்தார். எனினும் உணர்ச்சிவசப்பட்டு தனது தந்தையாரின் செயலை வன்மையாய் கண்டித்து ஒரு கடிதம் எழுதினார். கடிதம் கீழே தரப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

அன்புள்ள அப்பா,

கடைசியில் நீங்கள் என்னைக் காப்பாற்றுகிற முயற்சியில் தனி நீதி மன்றத்தில் பிரார்த்தனை மனு சமர்ப்பித்ததையறிந்து மிகுந்த அதிர்ச்சி யடைந்தேன். இந்தச் செய்தி என் நெஞ்சைப் புண்ணாக்கிவிட்டது. என் அமைதியைக் குலைத்து மன நிம்மதியை அகற்றிவிட்டது. எப்படி நீங்கள் இப்படி ஒரு முடிவுக்கு வந்தீர்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை. ஒரு பாசமிக்க தந்தையானாலும், என்னைக் கலந்து கொள்ளாமல் இப்படி ஒரு செயலைப் புரிய உங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது என்று எனக்கு புரியவில்லை. அரசியலில் தங்களுக்கும் எனக்கும் எப்போதும் கருத்து வேறுபாடு உண்டு. எனவே உங்களுக்கு எனது செய்கைகள் பிடிக்கிறதா இல்லையா என்பதை நான் கவனிக்காமல் சுதந்திரமாய் செயலாற்றி வருகிறேன்.

இந்த வழக்கு விசாரணை துவங்கியதும் நீங்கள் எனக்கு அறிவுரை கூறினீர்கள். மிகவும் கவனமாக வழக்காட வேண்டுமென்றும், தற்காப்புக்காக நன்கு முயற்சிக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தினீர்கள். அப்போதே உங்கள் யோசனையை நான் ஏற்கவில்லை என்பதை மறந்திருக்க மாட்டீர்கள். என்னைக் காப்பாற்றிக்கொள்ள நான் விரும்பவில்லை. அதைப் பற்றி நான் சிந்திக்கவும் இல்லை.

இந்த வழக்கில் நாங்கள் எங்கள் நீதிக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம். எனது ஒவ்வொரு செயலும் அந்த நீதிக்கும், கோட்பாடுகளுக்கும், திட்டத்திற்கும் ஏற்ப அமையவேண்டும். தற்சமயம் நிலைமை எப்படியிருந்தாலும் தற்காப்புக் காக நான் ஒரு போதும் முயற்சிக்கமாட்டேன்.

புரட்சியாளர்கள் நீதிமன்றங்களின் சட்ட நடவடிக்கைகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. எத்தனை கடுமையான தண்டனை விதிக்கப் பட்டாலும் அதை வீரத்துடன் ஏற்கவேண்டும் என்பதே என் கருத்து. புரட்சியா ளர்கள் தங்களை தற்காத்துக் கொள்ளலாம். ஆனால், அது அரசியல் காரணங் களுக்காக மட்டுமே செய்யப்பட வேண்டும். சொந்தக் காரணங்களுக்காக அல்ல. இந்த வழக்கில் இந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே நாங்கள் செயல்பட்டு வருகிறோம். இதில் நாங்கள் வெற்றி பெற்றோமா இல்லையா என்று நான் இப்போது தீர்மானிக்க முடியாது. நாங்கள் எங்கள் கடமையைச் செய்கிறோம்.

www.padippakam.com

லாகூர் சதி வழக்கு அவசரச் சட்டத்தின் முன்னுரையில் நாங்கள் சட்டத்தையும், நியாயத்தையும் இழிவுபடுத்த முயல்வதாய் பிரிட்டிஷ் வைஸ்ராய் கூறுகிறார். சட்டத்தை நாங்கள் இழிவுபடுத்துகிறோமா அல்லது அவர்கள் இழிவுபடுத்துகிறார்களா என்பதை மக்களுக்குக் காட்டுவதற்கு எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. இதை நீங்களும், மற்றவர்களும் ஒப்புக் கொள்ளாமல் போகலாம். ஆனால் அதற்காக நீங்கள் எனக்குத் தெரியாமல், என்னைக் கலந்தாலோசிக்காமல் எதை வேண்டுமானாலும் செய்ய முடியாது. என் உயிருக்கு நீங்கள் அளிக்கும் மதிப்பை நான் அளிக்க விரும்பவில்லை. எனது லட்சியங்களையும், கொள்கைகளையும் விற்று அதை வாங்குமளவுக்கு என்னுயிர் விலையுயர்ந்ததாக நான் கருதவில்லை. என்னைப் போலவே என் தோழர்கள் பலரும் இந்த வழக்கில் இருக்கிறார்கள். நாங்கள் அனைவரும் ஒரே நீதியைப் பின்பற்ற முடிவு செய்திருக்கிறோம். இன்று வரை அந்த முடிவில் உறுதியாக நிற்கிறோம். இறுதிவரை நிற்போம். அதற்காக நாங்கள் சொந்த முறையில் எத்தனை பெரிய விலை கொடுக்க நேர்ந்தாலும் சரிதான்.

அப்பா! எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது. நாகரீகத்தின் சாதாரண விதிகளை கூட நான் மீறுகிறேனோ என்று அச்சமாக இருக்கிறது. தந்தையே! யாரோ என்னைப் பின்னாலிருந்து கத்தியால் முதுகில் குத்திவிட்டாற்போல எனக்குத் தோன்றுகிறது. அதை நீங்களே செய்திருப்பதுதான் இன்னும் மோசமான விசயம். ஆனால் நீங்கள் இவ்வாறு செய்தது பலவீனத்தால், மிகவும் மோசமான பலவீனத்தால் என்றுதான் நான் கூறமுடியும்.

ஒவ்வொரு மனிதனின் உண்மைக்கும் சோதனையான காலமிது. ஆனால் அப்பா! நீங்கள் இந்தச் சோதனையில் தேறவில்லை என்று நான் தெளிவாய் சொல்கிறேன். நீங்கள் ஒரு உண்மையான தேசபக்தர் என்பது எனக்குத் தெரியும். இந்திய நாட்டின் விடுதலைக்காக உங்கள் வாழ்க்கையை நீங்கள் காணிக்கையாய் தந்ததையும் நான் அறிவேன். ஆனால் இந்த நேரத்தில் நீங்கள் பலகீனமாக ஏன் நடந்து கொண்டீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

உங்களுக்கும், மற்ற நண்பர்களுக்கும் மற்றும் இந்தப் பிரச்சனையில் ஆர்வமுள்ள அனைவருக்கும் நான் இறுதியாய் சொல்ல விரும்புவது இதுதான். நான் உங்கள் செய்கையை நிராகரிக்கிறேன். தற்காப்புக்காக முயற்சி எதையும் செய்யும் நோக்கம் எதுவும் எனக்குக் கிடையாது. என்னுடைய தோழர்கள் சிலர் தற்காப்புக்காக நீதிமன்றத்தில் தாங்கள் குற்றமற்றவர்கள்



படிப்பகம்

என்று விண்ணப்பம் செய்து கொண்டார்கள். அது ஏற்கப்பட்டிருந்தாலும் நான் எனக்காக அப்படிச் செய்திருக்க மாட்டேன். உண்ணாவிரதத்தின்போது நான் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை டிரிபியூனலிடம் கொடுத்தேன். அந்த மனுவைக் கூட நான் தற்காப்புக்காகக் கொடுத்த மனு என்று சிலர் தவறாகக் கருதிவிட்டார்கள். தற்காப்புக்காக அதுபோன்ற செயலை நான் விரும்பியதே யில்லை.

எனது பழைய உறுதி இன்னும் குன்றவில்லை அப்பா! ஆனால் உங்கள் செயலைப் பற்றி சிறையிலுள்ள எனது தோழர்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொள்ள நேரும். நான் அவர்களுக்கும், எங்கள் இயக்கத்திற்கும் துரோகம் செய்துவிட்டதாக அவர்கள் கருதலாம். அவர்களுக்கு விளக்கிச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைக்காமல் போகலாம்.

இந்தச் சங்கடமான விஷயத்தைப் பற்றிய எல்லா விபரங்களும் பொது மக்களுக்குத் தெரிய வேண்டும். ஆகவே இந்த என்னுடைய கடிதத்தை அனைவரும் அறிந்து கொள்ளத்தக்க முறையில் வெளியிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன் உங்கள் மகன்,
சர்தார் பகத்சிங்

தந்தைக்கு மகன் பகத்சிங் எழுதிய கண்டனம் மிகுந்த உணர்ச்சிமயமான கடிதம் பத்திரிகைகளில் படத்துடன் பெரிதாகப் பிரசுரிக்கப்பட்டது. பகத்சிங்கின் மன உறுதியை நாட்டு மக்கள் பாராட்டினார்கள்.

## தீர்ப்பும், தண்டனையும்

தீர்ப்பு அறிவிக்கப்படும் நாள் மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. தீர்ப்புக்கு மூன்று நாட்களுக்கு முன்பு பகத்சிங்குக்கும் மற்ற போராளி களுக்கும் சிறையில் கடைசி விருந்தும், வாழ்த்துப் பத்திரமும் அளிக்கப் பட்டன. அதில் சிறை அதிகாரிகளும், கைதிகளும் கலந்து கொண்டனர். பரபரப்பும் ஆவலுமாய் அடுத்த மூன்று நாட்கள் கழிந்தன. சிறையைச் சுற்றிலும் ஆயுதந்தாங்கிய போலீசார் காவல் காத்தனர். நெருக்கடியான நிலைமை ஏற்படுமென்று பயந்துதான் அரசு பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தது.

1930ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7ம்நாள் காலை நேரத்தில் தனி நீதி மன்றத்திலிருந்து ஒரு சேவகன் மத்திய சிறைக்கு வந்தான். கைதிகள் யாரும்

www.padippakam.com

கலந்து கொள்ளாமல் ஒருதலைப்பட்சமாக விசாரணை செய்யப்பட்டு ஒருதலைப்பட்சமாகவே தீர்ப்பும் அளிக்கப்பட்டது. எனவே தனி நீதிமன்றத்தின் தீர்ப்பு இந்தச் சேவகன் வாயிலாக அறிவிக்கப்பட்டது. தீர்ப்பு நகல்களும் அளிக்கப்பட்டது. தீர்ப்பின் சில பக்கங்களில் கருப்புக் கரை தீட்டப்பட்டிருந்தது. தீர்ப்பில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய மூவருக்கும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

மற்றவர்களில் கிஷோரிலால், மகாவீர் சிங், விஜயகுமார் சிங், சிவவர்மா, கயாபிரசாத், ஜெயதேவ், கே.என்.திவாரி, பி.கே.தத் ஆகிய எட்டுப் பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. குந்தன்லாலுக்கு ஏழாண்டுகளும், பிரேமதத்தாவுக்கு மூன்றாண்டுகளும் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அஜய்குமார் கோஷ், சன்யால், தேஸ்ராஜ் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

## லாகூர் சதி வழக்குத் தீர்ப்பிலிருந்து சில முக்கியப் பகுதிகள்

1. 1928ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்துஸ்தான் சோசலிசக் குடியரசுப் படையினர், அது துவங்கிய நாள் முதல் பல்வேறு திட்டமிட்ட செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இவற்றில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய மூவரும் மிக முக்கிய பங்கு வகித்துள்ளனர் என்பது முடிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

2. சாண்டர்ஸ், ஏட்டு சானாசிங் ஆகிய இருவரைக் கொலை செய்தமைக் காகவே பகத்சிங், ராஜகுரு இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. இந்தப் படுகொலைக்காகவே துப்பாக்கி சுடுவதில் மிகவும் தேர்ச்சி பெற்ற ராஜகுருவை விசேஷமாய் கொண்டு வந்துள்ளனர் என்று தனி நீதிமன்றம் கருதுகிறது.

   போலீஸ் அதிகாரி சாண்டர்சை ராஜகுருதான் முதலில் சுட்டு வீழ்த்தி யுள்ளார். அவர் மோட்டார் சைக்கிளோடு விழுந்தபின் பகத்சிங் வெகு அருகாமையில் நின்று தனது தானியங்கித் துப்பாக்கியால் சுட்டு சாகடித்துள்ளார்.

3. இவ்வழக்கில் குற்றவாளிகள் சிலர் அப்ரூவர்களாக மாறி ஒப்புதல் வாக்கு மூலங்களைத் தெரிவித்துள்ளனர். அதைவிட இவ்வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் பலர் பகத்சிங்கும், ராஜகுருவும் கொலைகளைச் செய்துவிட்டு மாயமாய் மறைந்தது குறித்து சாட்சியமளித்துள்ளனர். சாட்சிகள் குற்றவாளி களைச் சரியாகவே அடையாளமும் காட்டியுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

4. துப்பாக்கி வல்லுனர் திரு.சர்ச்சில் இவ்வழக்கில் துப்பாக்கிகள், குண்டுகளைப் பற்றி ஆய்வு செய்து சாட்சியமளித்துள்ளார். சாண்டர்ஸின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட குண்டுகளும், பகத்சிங்கின் துப்பாக்கியில் எஞ்சிய குண்டுகளும் ஒரே மாதிரியானவை. பகத்சிங்கிடமிருந்த அந்தக் கைத் துப்பாக்கி, நாடாளுமன்றத்தில் குண்டு வீசிய பின் கைப்பற்றப்பட்டது.

5. சுகதேவ் இந்த சதியில் மூளையாகவும், பகத்சிங்குக்கு வலது கையாகவும் செயல்பட்டுள்ளார். கட்சிக்குப் புதிதாக ஆட்களைத் தேர்வு செய்வது முதல், சாண்டர்சைக் கொலை செய்வது நாடாளுமன்றத்தில் குண்டு வீசுவது வரை சதித் திட்டம் தீட்டியதில் இவருக்குப் பிரதான பங்கெடுப்பு இருந்திருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதில் இன்னும் முக்கியமானது என்னவென்றால் ஆக்ரா, லாகூரில் வெடிகுண்டு செய்வதற்கு சுகதேவ்தான் ஏற்பாடு செய்துள்ளார். லாகூர் வெடிகுண்டுத் தொழிற்சாலையைப் போலீசார் சுற்றி வளைத்தபோது சுகதேவ் தனது துப்பாக்கியால் சுட முயற்சித்துள்ளார். அவரை வெடி குண்டுத் தொழிற்சாலைக்கு உள்ளேயே வைத்துப் போலீசார் கைது செய்துள்ளனர்.

வெடிகுண்டுத் தொழிற்சாலையிலிருந்து ஒரு குண்டு, எட்டு வெற்று குண்டுகள், வெடி மருந்துகள், குண்டு செய்யும் விதம் பற்றிய புத்தகங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. குண்டுகள் செய்யும் பணிக்காக நான்கு கொல்லர்களையும், தச்சர்களையும் சுகதேவ்தான் வேலைக்கு அமர்த்தியதாய் சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

6. குற்றவாளிகளுக்கு சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வதற்கு போதுமான சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டது. ஆனால் அந்த சந்தர்ப்பங்களையெல்லாம் குற்றவாளிகள் பயன்படுத்தாமல் நிராகரித்துவிட்டனர் என்பதை இந்தத் தனி நீதிமன்றம் தெரிவிக்கிறது.

பகத்சிங்கிற்கும் அவரது தோழர்களுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட செய்தி ஒரு நொடியில் லாகூர் நகரம் முழுவதும் பரவிவிட்டது. இந்தத் துயரச் செய்தியைக் கேட்டு மக்கள் மிகுந்த உணர்ச்சி வசப்பட்டுக் கோபமடைந்தனர். அரசு உடனே 144 தடை உத்தரவு பிறப்பித்தது. அதை மீறி நகருக்கு வெளியே இருந்த நகராட்சி மைதானத்தில் மக்கள் கூடிவிட்டனர். முன்னறிவிப்போ, முயற்சியோ இல்லாமல் ஒரு பெரிய பொதுக்கூட்டம்


படிப்பகம்

www.padippakam.com

நடந்தது. பேசிய பலரும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்கள். கைதிகள் இல்லாமலே விசாரணை நடத்தியதற்காகவும், மனித தன்மையில்லாமல் தண்டனை விதித்ததற்காகவும் அரசாங்கத்தை அவர்கள் ஏசினார்கள். பத்திரிகைகள் சிறப்பிதழ்கள் வெளியிட்டன. லாகூர் கொலை, சதிவழக்கில் தண்டிக்கப்பட்ட அனைவருடைய புகைப்படங்களும் அவற்றில் வெளியிடப் பட்டன. அனைவருடைய புகைப்படங்களும் பத்திரிகைகளுக்கு எப்படிக் கிடைத்தன என்று புரியாமல் சிறை அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் விழித்தனர்.

மறுநாள் அக்டோபர் எட்டாம் தேதி புதன்கிழமை லாகூரிலும், நாட்டின் முக்கிய நகரங்களிலும் மக்கள் கொதித்தெழுந்தனர். குறிப்பாக இளைஞர்கள் கொந்தளித்தனர். பள்ளிகள், கல்லூரிகள் மூடப்பட்டன. லாகூரில் மூட மறுத்த ஒரு கல்லூரியின் முன்பு மறியல் செய்த பதினேழு பெண் மாணவிகள் கைது செய்யப்பட்டனர். பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மீது போலீசார் தடியடி நடத்தினர். பொது மக்கள் மீதும் தடியடிப் பிரயோகம் நடந்தது.

மாலையில் லாகூரில் மாபெரும் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடந்தது. ஊர்வலத்தினர் பகத்சிங் வாழ்க! ராஜகுரு வாழ்க! சுகதேவ் வாழ்க! என்று முழங்கினார்கள். நகராட்சி மைதானத்தில் லாலா லஜபதிராயின் புதல்வி பார்வதி தேவி தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. இதில் 12,000 பேர் கலந்து கொண்டனர்.

அமிர்தசரசிலும் பொது வேலை நிறுத்தம் நடந்தது. டில்லி, பம்பாய், பனாரஸ், கான்பூர், கல்கத்தா, அலகாபாத் போன்ற பெரு நகரங்களிலும், வேலை நிறுத்தமும், பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன. நாட்டின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் கண்டனக் குரல்கள் எழுந்தன.

## பாதுகாப்புக்குழு அப்பீல்

லாகூர் சதி வழக்குத் துவங்கியதுமே லாகூரில் ஒரு பாதுகாப்புக்குழு நிறுவப்பட்டது. இந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லீம்கள் என்ற வேற்றுமையின்றி இக்குழுவில் பலரும் இடம் பெற்றிருந்தனர். கைதிகளைப் பாதுகாக்கவும், அவர்களது குடும்பங்களைப் பாதுகாக்கவும் இக்குழு நிதி திரட்டியது. இதில் ஏழைகளே அதிகமான நிதியை வழங்கினார்கள்.

கைதிகளுக்கு இவ்வழக்கில் சட்ட உதவி தேவைப்படவில்லை. எனவே அவர்களுக்குப் பாதுகாப்புக்குழுவினர் நல்ல புத்தகங்களை அனுப்பி



படிப்பகம்

www.padippakam.com

னார்கள். வெகுதூரத்திலிருந்து கைதிகளை பார்க்க வருகிறவர்களுக்கு தங்க இடவசதி, உணவு வசதிகள் செய்து கொடுத்தனர். கைதிகளின் பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு பொருளுதவி செய்தனர்.

தீர்ப்பு வெளி வந்ததும் பாதுகாப்புக் குழுவினர் போராளிகளுக்கு விதிக்கப் பட்ட தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்ய விரும்பினார்கள். அது குறித்து சிறையில் பகத்சிங்கை சந்தித்துப் பேசினார்கள். பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்ய வேண்டுமென்று ஏற்கெனவே பகத்சிங்கும் அவரது கூட்டாளிகளும் தீர்மானித்திருந்தனர். அதற்குப் பின்வரும் காரணங்களே காரணமாகும்.

1. மேல் முறையீடு மூலம் உலக நாடுகளுக்குத் தங்கள் விடுதலைப் போராட்டம் பற்றிய உண்மைகள் தெரியவரும். தங்கள் இயக்கமும் பிரபல மாகும். தங்கள் இயக்கம் தனித்தன்மை கொண்டது. அது தேச விடுதலை யோடு சமத்துவ சமுதாய அமைப்புக்கும், சமூக நீதிக்கும் போராடுகிறது என்பதை உலகறியச் செய்யலாம்.

2. லாகூர் சதி வழக்கு அவசரச் சட்டம் பிறப்பித்தபோது பிரிட்டிஷ் ஆட்சி யாளர்கள் - விடுதலைப் போராளிகள் ஒழுங்கீனமாக நடந்து கொண் டார்கள்; அதனால் ஒழுங்காக விசாரணை மேற்கொள்ள முடியவில்லை. அதனால்தான் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது என்று கூறியிருந் தார்கள். அப்பீல் செய்வதன் மூலம் அது எவ்வளவு பெரிய பொய் என்பதை உலகுக்கு தெரிய வைக்கலாம்.

3. போராளிகள் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வேண்டுமென்றே வழக்கு விசாரணைக்கு இடையூறு செய்தார்கள் என்று கூறினார்கள். அது அப்பட்டமான பொய் என்பதை நிரூபிக்கலாம். மேலும் இந்திய நாட்டின் விடுதலைப் போராட்ட அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் எத்தனை இழிவாகவும், கொடுமையாகவும் நடத்தப்படுகிறார்கள் என்பதை உலக மக்களுக்கு அம்பலப்படுத்தலாம்.

4. 63 நாட்கள் உண்ணாவிரத அறப்போர் நடத்தி விடுதலைப் போராளி யதீந்திரநாத் தாஸ் தனது இன்னுயிரையே தியாகம் செய்ததை உலகறியச் செய்யலாம்.

5. இந்திய விடுதலைப் போர் என்பது வெறும் அகிம்சாவாதிகளின் போராட் டம்தான் என்று கருதிக்கொண்டிருக்கும் ஆங்கிலேயருக்கு - சோசலிஸ சமதர்மப் புரட்சியாளர்களும் போராடுகிறார்கள் என்பதைத் தெரிவிக்கலாம்.


படிப்பகம்

www.padippakam.com

6. குறிப்பிட்ட இக்காலத்தில் பிரிட்டிஷ் அரசுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள காந்தியடிகள் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தார். அச்செயல் இந்திய மக்களுக்குப் பெருத்த அவமானம் என்பதையும், காங்கிரஸ் கட்சியின் அரசியல் பலவீனத்தையும் உலகுக்குத் தெரிவிக்கலாம்.

7. லாகூர் சதி வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு தேசத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அது பெரும் நெருப்பாய் பரவி, மக்கள் வீறு கொண்டு எழுவதற்கு தூக்குத்தண்டனையை நிறைவேற்றுவதைக் கொஞ்ச காலம் தள்ளிப் போடலாம். நாட்கள் அதிகரிக்க, அதிகரிக்க மக்களின் கோபாவேசம் பெருகும். அதற்கு இந்த அப்பீல் பயன்படும்.

இந்தச் சரியான காரணங்களினால் பகத்சிங்கும் அவரது தோழர்களும் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்ய ஒப்புதல் தெரிவித்தனர். அதே நேரத்தில் "வழக்காடும் நமது வக்கீல்கள் எங்களைப் புரட்சிக்காரர்கள் இல்லை என்றோ, இந்தியாவில் புரட்சி இயக்கமே இல்லை என்றோ வாதாடக்கூடாது. அதோடு ஆங்கில ஆட்சியின் சட்டங்களின் இண்டு இடுக்குகளில் உள்ள பலவீனங்களைப் பயன்படுத்தி அதன் உதவியால் எங்களுக்குத் தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று வாதாடக்கூடாது" என்று நிபந்தனையும் விதித்தனர்.

அதன்படியே லண்டனிலிருந்து பிரிவி கவுன்சிலுக்கு வழக்கு அப்பீல் செய்யப்பட்டது. விடுதலைப் போராளிகளுக்கு அந்தக் காலத்தில் மிகவும் புகழ்பெற்ற வழக்கறிஞர் கே.சி.பிரிட் என்பவர் வாதாடினார்.

"இந்த வழக்குக்காக பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் சிறப்பு நீதிமன்றம் அமைத்தது இந்திய அரசியல் சட்டம் 72வது பிரிவின்படி செல்லுபடியாகாது".

"ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டிய அளவுக்கு இந்த வழக்கில் விசேட காரணங்கள் ஏதுமில்லை"

"அவசரச் சட்டம் பிறப்பித்தது, சிறப்பு நீதிமன்றம் அமைத்தது, குற்றம் சாட்டப்பட்டவர்களே இல்லாமல் ஒருதலைப்பட்சமாக விசாரணை நடத்தி அதன் மீது தீர்ப்புச் சொன்னது சட்ட விரோதமானதாகும்".

இதையே வழக்கறிஞர் பிரிட் பிரிவி கவுன்சில் முன்வைத்து வாதிட்டார். ஆனால் பிரிவி கவுன்சிலின் நீதிபதிகள் லாகூர் சதி வழக்கு சிறப்பு நீதிமன்ற நீதிபதிகளை மிஞ்சியவர்களாயிருந்தனர். பிரிட் முன் வைத்த வாதங்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com

அரசு வழக்கறிஞர் பதில் சொல்ல எழுந்தார். லண்டன் நீதிபதிகள் அவரை வேண்டாம் என்று சைகை மூலம் தடுத்து நிறுத்திவிட்டு ஏற்கெனவே தீர்மானித்திருந்த அடிப்படையில் தீர்ப்பைக் கூறினார்கள்.

1931 பிப்ரவரி 11ம் நாள் அப்பீல்தாரர்களின் மனு தள்ளுபடி செய்யப்படுவதாகவும், தண்டனைகள் உறுதி செய்யப்படுவதாகவும் அவர்கள் தீர்ப்பளித்தார்கள். வெள்ளையர்கள் தங்கள் எஜமானத்துவத்திற்கு ஆபத்து வராதிருக்க எப்படித் தீர்ப்பளிக்க வேண்டுமோ அப்படித் தீர்ப்பளித்தார்கள். சட்டம், நீதி, மரபு என்பதெல்லாம் அவர்களது நலனுக்காகவே என்பது இந்த மேல் முறையீட்டிலும் நிரூபணமானது. மூவருக்கும் தூக்குத்தண்டனை உறுதியாகிவிட்டது.

## தூக்கு மேடை

பிரிவி கவுன்சிலின் தீர்ப்புக்கு பிறகு வைஸ்ராயின் ஒப்புதல் பெற்று பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் மூவரையும் தூக்கிலேற்ற நாள் குறிக்கப்பட்டது. 1931ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் செவ்வாய்க்கிழமை தூக்கிலிடுவது என்று முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது.

தேசத் தலைவர்கள், பத்திரிகைகள், போராளிகளின் உற்றார் உறவினர்கள், பொது மக்கள் அனைவரும் அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்தனர். எங்கள் இளஞ்சூரியன் பகத்சிங்கையும் அவரது தோழர்களையும் தூக்கிலிட வேண்டாமென்று. ஆனால் அதையெல்லாம் நிராகரித்துவிட்டு அவர்களைக் கொல்வதற்கு நாள் குறித்துவிட்டது அரக்கமனம் கொண்ட ஏகாதிபத்திய அரசு.

## தம்பிக்குக் கடிதம்

பகத்சிங் தூக்கிலேற்றப்படுவதற்குச் சில தினங்களுக்கு முன்னால் அவரது குடும்பத்தினர் சிறைக்கு வந்திருந்தனர். வரவிருக்கும் மரணம் பற்றிய எந்தச் சலனமுமின்றித் தனது வீட்டாருடன் அவர் உரையாடினார். ஆனால் அவரது தம்பி குல்தார் சிங் அண்ணனின் சாவை எண்ணிக் கதறி அழுதார். பகத்சிங்கும் மிகுந்த உணர்ச்சி வசப்பட்டுவிட்டார். பின்பு அனைவரும் ஊர் திரும்பிய பின் தனது தம்பிக்கு மறுநாளே ஒரு கடிதம் எழுதினார்.

அக்கடிதம் ஒரு புரட்சியாளன் மரணத்தையும் எப்படி நேர்கொள்ள வேண்டும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாய் இன்றும் திகழுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

அன்புள்ள குல்தார்,

இன்று உனது கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் என்னை மிகவும் வேதனைப்படுத்திவிட்டது. உனது குரலில் சோகம் ததும்பியது. உனது கண்ணீரை என்னால் தாங்கமுடியவில்லை. நீ நன்றாகப் படி; உடல் நலத்தையும் கவனித்துக் கொள்.

மனம் தளர்ந்து விடாதே. ஆட்சியாளர்கள் புதுப்புது வழிகளில் அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள். அவர்கள் அதில் எந்த அளவுக்குச் செல்ல முடியும் என்பதை நாங்கள் காண விரும்புகிறோம்.

உலகின் மீது நாங்கள் ஏன் ஆத்திரம் கொள்ள வேண்டும்? வானத்தைப் பார்த்து நாங்கள் ஏன் புலம்ப வேண்டும்?

நாங்கள் புதியதோர் உலகைப் படைக்க விரும்புகிறோம். அதற்காக நாங்கள் இறுதி வரை போராடுவோம்.

அன்பு நண்பர்களே! என்னுடைய வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டது. காலைக் கதிரவனின் ஒளிக்கு முன்னால் இரவு விளக்கைப் போன்று அணையும் தறுவாயில் நிற்கிறேன். நமது கொள்கைகளும், கருத்துக்களும் மின்பொறி போல் பற்றி உலகில் பேரெழுச்சியை உண்டாக்கும்.

நான் அழிந்து போவதால் அந்த நெருப்பு அணைந்துவிடாது.

நாட்டு மக்களே! மகிழ்வாய் இருங்கள்!

எங்களைப் பற்றிய கவலையை விடுங்கள்!

நாங்கள் மரணத்தைத் தழுவப் போகிறோம்!

நல்வாழ்த்துக்கள் உங்களுக்கு!

தைரியமாய் இருங்கள்!

இந்தக் கடிதம்தான் பகத்சிங் தனது கைப்பட எழுதிய கடைசிக் கடிதமாகும்.

தூக்கிலேற்றும் நாள் நெருங்க நெருங்க நாட்டு மக்கள் பரபரப்படைந்தனர். "24.3.1931ல் சிறை வாசலில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடப் போகிறார்கள். அப்படிக் கூடும் ஆத்திரங்கொண்ட கும்பலை அடக்கப் போதிய பாதுகாப்புத் தேவை" என்று ரகசியப் போலீசார் அரசுக்குச் செய்தி அனுப்பினார்கள்.

தூக்கிலிடப்படுவதற்கு முதல் நாள் கைதிகளை அவர்களது உறவினர்கள்



படிப்பகம்

www.padippakam.com

கடைசி முறையாகச் சந்திக்கலாம் என்பது விதி. பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் பெற்றோர்களும், உறவினர்களும் அவர்களைச் சந்திக்க மனுக் கொடுத்தார்கள். ஆனால் சிறை நிர்வாகம் யாரையும் பார்க்க அனுமதிக்க மறுத்துவிட்டது.

அது மட்டுமல்ல, வெள்ளைக்காரக் குள்ள நரிகள் 24.3.1931ல் மக்கள் கூடுவதற்கு முன்பாகவே மூவரையும் கொன்று விடுவது என்று ரகசியமாய் முடிவு செய்தனர். எனவே 23.3.1931ம் நாள் மாலை 4 மணிக்கு சிறைக்கதவுகளை மூடித்தாழ் போட்டனர். இரவு 7 மணிக்கு சிறை அதிகாரிகளின் கூட்டம் நடந்தது. பின்பு அனைவரும் பதட்டத்துடன் எழுந்து பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய மூவரும் இருக்கும் கொட்டடிகளுக்குச் சென்றனர்.

வீரர்கள் மூவரின் கைகளிலும், கால்களிலும் விலங்கிட்டுச் சங்கிலி போட்டு அறைகளில் பூட்டி வைக்கப்பட்டிருந்தனர். சிறை வார்டர்கள் கதவுகளைத் திறந்தனர். பகத்சிங், லெனின் எழுதிய அரசும் புரட்சியும் என்ற நூலைப் படித்துக் கொண்டிருந்தவர் ஆச்சரியமாக அதிகாரிகளைப் பார்த்தார்.

"நாளைக்குத்தானே எங்களைத் தூக்கிலிட வேண்டுமென்று உத்தரவு" என்று பகத்சிங் கேட்டார்.

"ஆம். அது முந்திய உத்தரவு. ஆனால் இப்போதே தூக்கிலிடும்படி இன்று உத்தரவு" என்றான் சிறை அதிகாரி.

பகத்சிங் சிரித்தார். பின்பு "பிரிட்டிஷ் அரசுக்கு எங்கள் மீது கருணை போலும்! அதனால்தான் அடிமை இந்தியாவில் நாங்கள் இன்னும் 12 மணி நேரம் கூட அடிமைகளாய் இருக்கக்கூடாது என்று கருணை காட்டி இன்றே தூக்கிலிடத் துடிக்கிறது போலும். ஆகட்டும் நாங்கள் தயார்" என்று கம்பீரமாய் கூறினார். சிறை அதிகாரிகள் 'இப்படியும் ஒரு வீரனா?' என்று அதிசயித்தனர்.

மூன்று வீரர்களும் அறைக்குள்ளிருந்து வெளியே கொண்டு வரப்பட்டனர். சிறை அதிகாரி பகத்சிங்கிடம் "சர்தார்ஜி! சிறை விதிப்படி மரண தண்டனை நிறைவேறுவதற்கு முன்னால் உங்கள் ஆத்மா சாந்தியடைய உங்களுக்கு மதச் சடங்குகள் செய்ய வேண்டும். குருமார்கள் வந்திருக்கிறார்கள், செய்யட்டுமா" என்று கேட்டார்.

"நாங்கள் நாத்திகர்கள். எங்களுக்கு ஆத்மா- சடங்குகளில் நம்பிக்கையில்லை. வேண்டாம்" என மறுத்தார். அதிகாரிகள் ஒத்துக் கொண்டனர்.


படிப்பகம்

www.padippakam.com

பின்பு மூவரின் கண்களையும், கருப்புத்துணியால் கட்டினர். கைவிலங்குகளை அகற்றிவிட்டு, கைகளைப் பின்புறம் துணியால் கட்டி, தூக்கு மேடைக்கு அழைத்துச் சென்றனர்.

ஏகாதிபத்தியக் கொடுங்கோலாட்சிக்கெதிராக, முப்பது கோடி ஜனங்களின் உரிமைக்கும், சமநீதிக்கும், தன்மானத்திற்கும் போராடிய மாவீரர்கள் இப்போது தூக்கு மேடையில் நின்றார்கள். மாஜிஸ்திரேட் மூவரையும் பார்த்து "குற்றவாளிகளே! உங்கள் கடைசி ஆசை ஏதேனும் இருந்தால் சொல்லுங்கள்" என்று கேட்டார்.

பகத்சிங் பேசினார் "எங்களது ஆசை ஒன்றே ஒன்றுதான். நீதிமன்றத் தீர்ப்பின்படி நாங்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மன்னரை எதிர்த்து யுத்தம் நடத்தியவர்கள். எனவே எங்களை யுத்தக் கைதிகளாக நடத்த வேண்டும். சமூகவிரோதிகளைச் சாதாரணமாய் தண்டிப்பது போல எங்களைத் தூக்கிலிடக்கூடாது. ராணுவ வீரர்களை தருவித்து எங்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல வேண்டும். இதுவே எங்கள் கடைசி ஆசை" என்று கூறினார்.

"உங்களைத் தூக்கிலே போட வேண்டும் என்பதுதான் உத்தரவு. அதை நாங்கள் மாற்ற முடியாது. வேறு என்ன ஆசை - இருந்தால் சொல்லுங்கள்" என்றார் மாஜிஸ்திரேட்.

"அப்படியானால் எங்கள் க்ண்களை மூடியுள்ள கருப்புத் துணியை அகற்ற வேண்டும். நாங்கள் பிறந்த பொன்னாட்டின் மண்ணைப் பார்த்தபடியே சாக விரும்புகிறோம்" என்றார் சுகதேவ்.

மாஜிஸ்திரேட் கருப்புத்துணிகளை அகற்ற உத்தரவிட்டார். முதலில் பகத்சிங் மேடையில் நிறுத்தப்பட்டார். அவரது கழுத்தில் கொலையாளி சுருக்குக் கயிற்றை மாட்டினான்.

பகத்சிங் தனது சிம்மக்குரலில் "ராஜகுரு வருகிறேன்! வருகிறேன் சுகதேவ்" என்று கர்ஜித்தார்.

விசை அழுத்தப்பட்டது. பகத்சிங் உயிர் பிரிந்தது. ராஜகுருவும், சுகதேவும் உணர்ச்சி பிழம்புகளாய் கோஷமிட்டனர்.

"புரட்சி ஓங்குக!

பகத்சிங் வாழ்க!

ஏகாதிபத்தியம் ஒழிக!



படிப்பகம்

www.padippakam.com

யூனியன் ஜாக்கொடி வீழ்க! என்று முழங்கினர். இந்த முழக்கம் சிறைச் சாலை முழுவதும் எதிரொலித்தது. மற்றக் கைதிகளுக்கு விஷயம் புரிந்து விட்டது. வழக்கத்துக்கு விரோதமாக மூன்று மாவீரர்களையும் இரவிலே தூக்கிலிடுகிறார்கள் என்பதையறிந்து அனைத்துக் கைதிகளும் "பகத்சிங் வாழ்க! ராஜகுரு வாழ்க, சுகதேவ் வாழ்க! ஏகாதிபத்தியம் ஒழிக! என்று விண்ணதிர முழங்கினார்கள்.

அடுத்து ராஜகுருவும், சுகதேவும் தூக்கிலேற்றப்பட்டனர். சிறை டாக்டர் மூவரின் உடலையும் சோதித்து உயிர் பிரிந்துவிட்டது என்று சான்றிதழ் கொடுத்தார். மூன்று சடலங்களின் கண்களும் நெருப்பு மலர்களைப் போல் இருந்ததாய் டாக்டர் கூறினார்.

பகத்சிங்கையும் அவரது தோழர்களையும் கடைசி முறையாய் பார்க்க வந்திருந்த பெற்றோரும், உற்றாரும் ஆவலோடு சிறை வாசலில் காலையி லிருந்து உணவு கூட உண்ணாமல் காத்திருந்தார்கள். ஆனால் மூன்று வீரர்களும் அதற்குள் அநியாயமாய் கொல்லப்பட்டுவிட்டனர்.

கொல்லப்பட்ட பிணங்களைக் கூட உறவினர்களிடம் தர மறுத்துவிட்டனர். மூன்று சடலங்களையும், போலீஸ் லாரியில் ஏற்றினர். அப்போது இரவு எட்டரை மணி, லாரியில் ஜெகனாத் ஆச்சார்யா என்ற இந்துப் புரோகிதரையும், நத்தாசிங் கிரந்தி என்ற சீக்கியப் புரோகிதரையும் ஏற்றிக் கொண்டனர். பின்னால் மூன்று லாரி நிறையப் போலீசாரும், இரண்டு டன் விறகு, நான்கு டின் மண்ணெண்ணெயும் ஏற்றிப் பின் தொடர்ந்தனர்.

லாரிகள் சட்லஜ் நதியின் பழைய பாலத்துக்கருகில் வந்து நின்றன. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. மூன்று சடலங்களும் கீழே இறக்கப்பட்டன. மூன்று சடலங்களிலும் வாய், மூக்கு, காதுகளிலிருந்து ரத்தம் கசிந்திருந்ததைப் பார்த்துப் புரோகிதர்கள் பயந்தார்கள். போலீஸ் துணை ஆணையர் அமர்சிங் அவர்களிடம் "பயப்பட வேண்டாம். ஒரு சீக்கியப் பிணமும், இரண்டு இந்து பிணங்களும் உள்ளன. அவைகளுக்கு இறுதிச் சடங்குகள் செய்ய வேண்டும்" என்றான்.

அடுக்கிய விறகுக் கட்டைகளின் மேல் மூன்று சடலங்களையும் வைத்து மண்ணெண்ணெயை ஊற்றினர். சீக்கியப் புரோகிதர் "எங்கள் வழக்கப்படி இரவில் ஈமக்கிரியை நடத்தக்கூடாது" என்று கூறினார். பின்பு மிரட்டலுக்கு பயந்து இருவரும் அரைகுறையாக மந்திரங்களை ஓதினர். பின்பு பிணங்கள்


படிப்பகம்

www.padippakam.com

எரியூட்டப்பட்டன. சுமார் இரண்டரை மணி நேரமாகியும் பிணங்கள் வேக வில்லை. போலீஸ் அதிகாரிகள் எரியாத உடலின் பகுதிகளை வெட்டி நெருப்பில் போட்டனர்.

பின்பு எரியும் சிதையை அவசர அவசரமாய் தண்ணீர் ஊற்றி அணைத்து விட்டுக் கொஞ்சம் சாம்பலையும் எலும்புகளையும் அள்ளிக்கொண்டு போய் சட்லஜ் நதியில் அஸ்தி கரைத்தனர். எல்லாம் முடிந்ததும் போலீஸ் லாரிகளில் ஏறி அனைவரும் ஓடிப் போனார்கள். அப்போது விடியற்காலை ஐந்தரை மணி.

மறு நாள் காலையில் நகரம் முழுவதும் அரசின் சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. மக்கள் கூட்டம் கூட்டமாய் நின்று அவற்றை வாசித்தனர்.

## பொது மக்களுக்கு அறிவிப்பு

"தூக்குத்தண்டனைக் கைதிகள் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் தண்டனை நேற்று மாலையில் நிறைவேற்றப்பட்டது. சடலங்களை சட்லஜ் நதிக் கரையில் தகனம் செய்து அஸ்தி ஆற்றில் கரைக்கப்பட்டது".

அரசு வெளியிட்ட இந்தச் சுவரொட்டிகளை வாசித்த பொது மக்கள் குமுறி னார்கள். மக்கள் ஆயிரக்கணக்கில் கூடினர். அறிவிக்கப்படாத பொது வேலை நிறுத்தம் நடந்தது. துப்பாக்கி ஏந்திய ராணுவம் ரோந்து சுற்றியது.

சுமார் ஒரு லட்சம் பேர் திரண்டு சட்லஜ் நதியை நோக்கி ஊர்வலமாய் சென்றனர். மூவரின் உடல்களும் தகனம் செய்யப்பட்ட இடத்தில் கூடினர். சிதை எரிந்த இடத்தில் சாம்பலும், மாமிச எலும்புத் துணுக்குகளும் கிடந்தன. பெண்கள் சாம்பலை எடுத்துத் தங்கள் வயிற்றில் பூசிக்கொண்டனர். மடிந்த வீரர்கள் தங்கள் வயிற்றில் மகன்களாய் பிறக்க வேண்டும் என்பது அவர்களது ஆசை. சிலர் மாமிச எலும்புத் துணுக்குகளை எடுத்துப் பத்திரப்படுத்தினர். கூட்டத்தில் அஞ்சலி தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் பகத்சிங்கின் தந்தை தங்களைச் சிறை அதிகாரிகள் சந்திக்க விடாமல் தடுத்ததைக் கூறிவிட்டு அழுதார். கூட்டமும் குமுறி அழுதது.

அடுத்த மூன்று நாளில் கராச்சியில் காங்கிரஸ் மாநாடு கூட இருந்தது. முதல்நாள் இரவே (23.3.31) காங்கிரஸ் தலைவர்கள் மாநாட்டுக்கு செல்ல ரயிலடிக்கு வந்தனர். அங்கு பகத்சிங் அவரது தோழர்கள் தூக்கிலிடப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

செய்தி கிடைத்தது. அனைவரும் துயரமடைந்து கண்ணீர் விட்டனர்.

ஜவஹர்லால் நேரு அழுதபடியே திகைத்து நின்றார். ரயில் புறப்பட்டு விட்டது. ஓடிப்போய் ஏற முயன்று சறுக்கி விழுந்தார். பின்பு சமாளித்து ஏறினார். மறுநாள் அவர் ஒரு அறிக்கை வெளியிட்டார். பத்திரிகைகளில் அது வெளியாயிற்று.

"இந்த வீரர்களின் இறுதி நாட்களில் நான் எதுவுமே பேசாத ஊமையாக இருந்தேன். ஒரு வேளை நான் வாய் திறந்திருந்தால் அவர்களுடைய தூக்குத் தண்டனை ரத்தாவது தடைபட்டுப் போகுமோ என்று அஞ்சினேன்.

என் ரத்தம் கொதித்துக் கொண்டேயிருந்தது. எனினும் நான் வாயே திறக்கவில்லை. ஆனால் இப்போது எல்லாம் முடிந்துவிட்டது. நாம் சோகக் கடலில் வீழ்ந்துவிட்டோம்!

அளப்பரிய ஆற்றலும், துணிவும், செயலும், தியாக சிந்தனையும் கொண்ட நமது மாணிக்கங்களைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டோம். நாங்கள் எல்லோரும் சேர்ந்து காப்பாற்ற முடியவில்லை. தனது அருமைக் குழந்தை களைத் தூக்கு மேடையிலிருந்து காப்பாற்ற பாரத தாய்க்கு வலிமையில்லாமல் போய்விட்டது.

இந்தக் கொடிய தூக்கு தண்டனையை எதிர்த்து நாடெங்கும் கண்டனமும், அர்த்தால்களும், ஊர்வலங்களும் நடைபெறட்டும்.

நமது அடிமைத்தனமான கோழைத்தனத்தாலும், அவர்களுக்கு நாம் ஆதரவு கொடுக்காத நிலையாலும் நமது நாடே சோகத்தில் மூழ்கித் தவிக்கிறது. ஆயினும் இம்மாவீரர்களால் நாம் பெருமிதம் கொள்கிறோம். இவர்களை நாம் ஒரு போதும் மறக்கவியலாது.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இனி நம்மிடம் சமரச ஒப்பந்தத்திற்கு வரும் போது அவர்களுக்கும் நமக்கும் மத்தியில் பகத்சிங் அவரது தோழர்களின் உயிரற்ற சடலங்கள் கிடக்கும். இதை ஆட்சியாளர்களே மறந்து விடாதீர்கள்!"

நேருவின் இந்தச் செய்தி நாடு முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. நாடு முழுவதும் கண்டன ஊர்வலங்களும், அர்த்தால்களும் நடந்தன.

பகத்சிங் அவரது தோழர்களின் தூக்குத்தண்டனையை ரத்து செய்யும் பிரச்சனையில் காந்தியார் முழுமையான முயற்சி எடுக்கவில்லை என்ற குறை இளைஞர்கள் மத்தியில் இருந்தது. அதுபற்றிக் கடுமையாய் விமர்சித்தனர்.

படிப்பகம்

www.padippakam.com

காங்கிரஸ் மேடைகளில் கூட இதுபற்றி விமர்சனம் செய்யப்பட்டது.

## துருவ நட்சத்திரங்கள்

பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் மூவரும் நாடு விடுதலையடைந்த பிறகும் இளைஞர்களுக்குத் திசை காட்டும் துருவ நட்சத்திரங்களாகவே உள்ளனர். மூவரும் தங்கள் இறுதி நாட்களில் இந்த மண்ணில் லெனின் வழியில் ஒரு சோசலிச சமூகத்தை உருவாக்க விரும்பினர். அவர்கள் மறைவுக்குப் பிறகு அவர்களின் தோழர்கள் பலர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து பணியாற்றினர்.

தோழர் அஜய்குமார் கோஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளராக இருந்து மறைந்தார். காம்ரேட், ஜலசமாதி போன்ற அமர இலக்கியங்களைத் தந்த தோழர் யஷ்பால் இறுதிவரை கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தார். பகத்சிங்கின் மற்றொரு தோழரான சிவவர்மா ஆயுள் தண்டனையை அனுபவித்து விட்டு இறுதிவரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராகவே இருந்து அண்மையில் மறைந்தார்.

பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய மூவரின் பெயர்கள் இந்த நாட்டு இளைஞர்களுக்கு ஆதர்ச ஒளியாய் என்றென்றும் திகழும். அவர்கள் கண்ட சோசலிசக் கனவை நிறைவேற்றும் பொறுப்பு தேச மக்களின் கைகளில் இருக்கிறது. அந்த மூன்று மாவீரர்களின் வாரிசுகளாய் நாமும் முழங்குவோம்.

**புரட்சி நீடூழி வாழ்க!**
**ஏகாதிபத்தியங்கள் ஒழிக!**
**மக்கள் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் மதவெறியரை முறியடிப்போம்!**
**இந்தியாவை சோசலிச பூமியாக்குவோம்!**

அடுத்த இதழில்
"பகத்சிங்கும் புரட்சித் தோழர்களும்"



படிப்பகம்

www.padippakam.com

# கீதையின் அடிப்படை (அ) கீதை காட்டும் தத்துவ அகழி

சு.பொ. அகத்தியலிங்கம்

*(பகவத் கீதை பற்றி கீ. வீரமணி, ஜோசப் இடமருகு, சர்தேசாய், திலிப் போஸ் எழுதிய நூல்கள் பற்றிய ஒரு அலசலாக இக்கட்டுரைத் தொடர் அமைகிறது. அதே சமயம் இந்த நூல்களைப் படிக்காத வாசகர்கள் சற்று தெரிந்து கொள்ள வசதியாக கீதை பற்றிய ஓர் அலசலாகவும் இக்கட்டுரைத் தொடர் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர்க்க முடியாத தேவையும் ஆகும். ஆகவே இக்கட்டுரைத் தொடர் புத்தக விமர்சனம், புத்தக அறிமுகம், கீதை பற்றிய அலசல் என்கிற மூன்று நோக்கில் எழுதப்பட்டுள்ளது. எனவே இதன் நடையும், இடை இடையே மேற்கோள்களும் அதற்கொப்ப அமைக்க வேண்டிய கட்டாயமாகி விட்டது. வாசகர்கள் இந்த சிரமத்தை புரிந்து கொண்டு பகிர்ந்து கொள்வார்கள் என நம்புகிறேன். —சு.பொ.அ)*

## I. கீதை பிறந்த காலமும் கதையும்

"கீதை என்று சொல்லப்படும் நூல், மகா பாரதத்தின் ஒரு பகுதியாகும். கீதையைச் சரியாகப் புரிந்து கொள்வதற்குப் பல விஷயங்களை அறிந்து கொள்வது அவசியமாகும். முதலாவதாக, அது மகாபாரதத்தின் ஒரு பகுதிதானா?; அதாவது அதனை எழுதிய ஆசிரியர் வேதவியாசர் என்று சொல்லப்படுவது உண்மைதானா? அல்லது அந்த மகா காவியத்தினுள் அது இடைச் செருகலாக நுழைக்கப்பட்டதா?; இரண்டாவதாக, கிருஷ்ணன் என்ற பெயரில் வரலாற்றில் யாராவது உண்டா?; மூன்றாவதாக, கீதையில் குறிப்பிடப்படுவது போல் குருசேஷத்திரப் போர் என்ற மாபெரும் போர் உண்மையிலேயே நடைபெற்றதா?; நான்காவதாக, அர்ஜுனனும்


படிப்பகம்

www.padippakam.com

(அவனைப் போன்ற) பிறரும் உண்மையான வரலாற்று நபர்களா?"

**(கீதையின் மறுபக்கம்–பக்கம் 225)**

மேலே தொடுக்கப்பட்டுள்ள பல கேள்விகள் பொருள் பொதிந்தவை என்பதில் ஐயமில்லை. இக்கேள்விகளுக்கும் உரிய பதிலையும் அதேபோல் கீதையின் சமூக நோக்கம் வர்ணாஸ்ரம தர்மக் காப்பே என்பதையும் பல்வேறு ஆய்வறிஞர்களின் துணையோடு நிறுவி இருக்கிறார் "கீதையின் மறுபக்கம்" என்கிற நூலில் கி. வீரமணி.

இந்நூலைப் படிக்காமலே தடை செய்யக் கோரினார் இந்து முன்னணித் தலைவர் இராம. கோபாலனும், துக்ளக் ஆசிரியர் சோவும். "இந்த நூலை நான் படிக்கவேண்டிய அவசியமே இல்லை, ஏன் பார்க்க வேண்டிய அவசியம்கூட இல்லை. இந்நூலைத் தடை செய்தாக வேண்டும்" என்றனர் அவர்கள். "சாத்தானின் வேதங்கள்" என்கிற நூலை எழுதிய சாலமன் ருஷ்டிக்கு.மரண தண்டனை விதித்த இஸ்லாமிய பழமைவாதிகளுக்கும் இவர்களுக்கும் அதிக வித்தியாசமில்லை.

**"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்**
**அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"**

என்றார் வள்ளுவர். ஆனால், "அப்படியே ஏற்றுக் கொள். சந்தேகிக்காதே! விசுவாசி. சந்தேகிப்பவன் மதவிரோதி, அஞ்ஞானி, மூடன், என மதப்பழமை வாதிகள் சீறிப்பாயும் மர்மம் என்ன என்ற கேள்வி எழுகிறது. எனவே "கீதையின் மறுபக்கம்" என்கிற கி.வீரமணி எழுதிய நூல் மட்டுமல்ல, பகவத் கீதையையும் மீண்டும் மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்துவது அவசியம் என்பது புலனாகிறது. நம் முன்னால் பல அடிப்படைக் கேள்விகள் எழுகின்றன.

## அடிப்படைக் கேள்விகள்

1. கி.வீரமணியின் நூல் மீது அவர்களுக்கு ஏன் அவ்வளவு ஆத்திரம்? ஏன் அவ்வளவு அச்சம்?

2. கி. வீரமணியின் இந்நூல் கூறுவது அனைத்தும் ஏற்கத்தக்கனவா?

இக்கேள்விகளுக்கு விடை தேடப் புறப்படும்போது மேலும் பல கேள்விக் கணை களை நாம் எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

1. பல நூற்றாண்டு காலமாக கோடிக்கணக்கான இந்திய மக்கள் உள்ளங்களில் பகவத் கீதை எப்படி ஒரு பிடிப்பை உண்டாக்கி இருக்கிறது?

2. விடுதலைப் போரில் முதலில் தூக்குமேடை ஏறிய குதிராம் போஸுக்கும், தேசப்பிதா மகாத்மா காந்திக்கும் இந்நூல் எப்படி ஊக்கம் தரும் டானிக்காக



படிப்பகம்

www.padippakam.com

மாறியது? ஒருவர் ஆயுதம் ஏந்துவதில் நம்பிக்கை உடைய தீவிரவாதி, இன்னொருவர் அகிம்சையைப் போதித்த—கடைப்பிடித்த மகாத்மா. இருவருக்குமே ஒரே நூல் எப்படி உந்து சக்தியாக முடிந்தது?

3. இன்றும் பகவத் கீதை மனித உயர்வுக்கு வழிகாட்டும் நூல் என்று மீண்டும் மீண்டும் முன்னிறுத்தப்படுவது ஏன்? விதவிதமாக மொழி பெயர்ப்புகளும் விளக்கங்களும் வந்து கொண்டே இருப்பது ஏன்? தொலைக்காட்சி போன்ற பெருந் திரள் மக்கள் ஊடகங்கள் மூலம் அதன் தாக்கம் வலுப்படுத்தப்படுவதேன்? அதை மக்களில் ஒரு பகுதியினர் உணர்வு பூர்வமாக ஏற்பது ஏன்?

4. இந்திய சமூகத்தை சிக்கெனக் கவ்விப் பிடித்திருக்கும் "பசி, அச்சம், அறியாமை," இவற்றிலிருந்து மக்களை விடுவிக்க விளையும் இயக்கங்கள் பகவத் கீதையைப் பயன்படுத்த இயலுமா? செய்யலாமா?

இப்படி நம்மைத் தாக்கும் கேள்விகளுக்கு விடை கண்டாக வேண்டும். எனவே இக்கட்டுரைத் தொடர், "கீதையின் மறுபக்கம்" என்கிற நூல் பற்றிய விமர்சனமாக, மட்டும் அமையாமல் பகவத் கீதை பற்றிய ஓர் அலசலாகவும் ஆய்வாகவும் மாறுவது தவிர்க்க இயலாது.

வள்ளுவருக்கு சைக்கிள் ஓட்டத் தெரியுமா? பகவத் கீதையில் கம்ப்யூட்டர் பற்றிய ஞானம் இருக்கிறதா? என்றெல்லாம் முரட்டுத்தனமாக கேட்பது பயன்படாது. ஏனெனில் ஒவ்வொரு நூலும் அது உருவான காலம், அன்றைய சமூக அமைப்பு, அதன் தேவைகள் அவற்றையொட்டியே எழுவது இயல்பு. ஆகவே நூல் தோன்றிய காலத்தை அறியாமல் எந்த நூலைப் பற்றியும் சரியான முடிவுக்கு வர இயலாது. அதே சமயம் பகவத் கீதை இந்துக்களின் 'புனித நூல்' என்கிற முத்திரை யைப் பெற்றுவிட்டதாலும்; பகவான் கிருஷ்ண பரமாத்மாவே அர்ஜுனனுக்கு கூறியது என்று கூறப்படுவதாலும், இந்நூலை ஒரு கால கட்ட வரையறைக்குள் கொண்டு வந்து ஆய்வு செய்வது பாவமாக கருதப்படுகிறது. தடுக்கப்படுகிறது. என்ன செய்வது?

## விவேகானந்தரே துணை

கி. வீரமணி தம் நூலில் இச்சிக்கலில் இருந்து விடுபட விவேகானந்தரை துணைக்கு அழைத்திருப்பது சாலப் பொருந்தும். விவேகானந்தர் கூறுகிறார்;

"உண்மைச் செய்திகளை அறிந்து கொள்ளத்தக்க வரலாற்று ஆய்வின் சிறப்பினை இந்த நாட்டு மக்கள் மிகக் குறைத்து மதிப்பிடுகிறார்கள். பலருக்குப் பயன்தரத்தக்க ஒரு நல்ல கருத்தைப் போதிப்பதற்காக உண்மை அல்லாத ஒன்றைச்


படிப்பகம்

www.padippakam.com

சொல்வதால் கேடு ஒன்றும் நேர்ந்துவிடாது என்று பல மக்கட் பிரிவினர் நம்புகிறார்கள். வேறு வகையாகச் சொல்வதானால், முடிவு நல்லதாக இருக்குமானால் வழி கெட்டதாக இருப்பினும் தவறில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவேதான் நமது தந்திரங்களில் பல, "மகாதேவர் பார்வதிக்குச் சொன்னார்" எனத் தொடங்குகின்றன. ஆனால் உண்மையை அறிந்து, உண்மையை மட்டுமே ஏற்றுக் கொள்வதை நாம் கடமையாகக் கொள்ள வேண்டும்; உண்மையை ஆராய்ந்து உணர வேண்டும் என்ற எண்ணமில்லாமல் மூடநம்பிக்கையை அப்படியே ஏற்றுக் கொள்வது நமது தொன்று தொட்டு மரபாக இருந்து வருகிறது. அந்தப் பழக்கம் நம்மை கட்டிப் போட்டுவிடுகிறது. இயேசு கிறுஸ்து, முகமது நபி போன்ற பெரியவர்களும்கூட அத்தகைய பல மூடநம்பிக்கைகளில் நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர். அவர்களாலேயே அவற்றை உதறிவிட முடியவில்லை; மூடநம்பிக்கைகள் அவ்வளவு வலுவானவை. எப்பொழுதும் உண்மையில் மட்டுமே உங்கள் பார்வையைப் பதிக்க வேண்டும்; பிற மூட நம்பிக்கைகள் அனைத்திலிருந்தும் அறவே விலகி இருக்க வேண்டும்."

**(கீதை பற்றிய சிந்தனைகள்–நூல்)**

ஆராயக் கூடாது என்கிற மதவாதிகள் விதிக்கும் தடையை விவேகானந்தர் உடைத்து நமக்கு வழி அமைத்துக் கொடுத்து விட்டார். எனவே நம் அலசலைத் தொடர்வோம். முதலில் பகவத் கீதை தோன்றிய காலம் எது? இக்கேள்விக்கு விடை காண்போம்.

## காலக் குழப்பம்

பகவத் கீதை குருசேஷத்திரப் போரின்போது உபதேசிக்கப்பட்டதாகக் கூறப்படுவதால் அப்படி ஒரு போர் நடந்ததா என்பதை அறிந்தாக வேண்டும்.

"பகவத் கீதை ஓர் ஆய்வு" எனும் நூலில் ஜோசப் இடமருகுவும், "கீதையின் மறுபக்க"த்தில் கி. வீரமணியும் தொகுத்துள்ள பல்வேறு சரித்திர ஆசிரியர்கள் சுட்டிக் காட்டியுள்ள சில காலங்களை கீழ்கண்டவாறு வரிசைப்படுத்தலாம்.

| | | |
|---|---|---|
| கி.மு. 3201 | – | பி.ஆர். மங்கட் |
| கி.மு. 3102 | – | ஸி.வி. வைத்தியா, ஆரியப்பட்டா, பாஸ்கர ஆச்சாரியா |
| கி.மு. 2449–48 | – | டி.சி. சென்குப்தா, விருத்த கார்கா, வராகமித்ரா கல்கணா |
| கி.மு. 1922 | – | ஜே.எஸ். கரண்டிகர் |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| கி.மு. 1468 | – | எம். ரங்காச்சாரியா |
| கி.மு. 1450 | – | பி.டி.சீனிவாச அய்யங்கார் |
| கி.மு. 1424 | – | ஏ. கண்ணிங்ஹாம் |
| கி.மு. 1400 | – | பக்கிம் சந்திர சட்டர்ஜி, எஸ்.டி.கோல்புரூர், பால கங்காதர திலகர், சீத்தாநாத் தத்துவ பூஷணம், ஆர்.சி. மஜும்தார், எம்.சி. ராய் சவுத்திரி, ஏ. பாஜம், பால்ரெனுப், |
| கி.மு. 1200–1042 | – | ஏ.டி. புசல்கார் |
| கி.மு. 1199 | – | கே.ஜி. சங்கர் |
| கி.மு. 1197 | – | கே.எல்.டப்ஃதாரி |
| கி.மு. 1191 | – | அரவிந்த மகரிஷி |
| கி.மு. 1151 | – | எஸ்.என். பிரதான் |
| கி.மு. 1000 | – | ஈ.ஜே.ரேட்சன், வின்செண்ட் ஸ்மித் |
| கி.மு. 950 | – | எ.ஃப்.சி. பர்ஜிட்டர் |
| கி.மு. 850 | – | எச்.ஜி.ரேசவுத்திரி |

இப்படி அப்போர் நடந்ததாக கூறப்படுகிற காலம் குறித்து மாறுபட்ட கருத்துகள் ஒருபுறம், மறுபுறம்

இந்திய பழமைவாதிகள் வரலாற்றை தமது மிதமிஞ்சிய கற்பனை காரணமாக நான்கு யுகங்களாக பிரித்துள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. கிரேதா யுகம் | – | 17,28,000 | வருடங்கள் |
| 2. திரேதா யுகம் | – | 12,90,000 | ” |
| 3. துவா பர யுகம் | – | 8, 64,000 | ” |
| 4. கலியுகம் | – | சுமார் 6000 வருடங்களுக்கு முன்பு துவங்கியதாம். | |

இராமாயணம் திரேதாயுகத்தில் உருவானது என்று கூறுகிறார்கள். அதாவது சுமார் 8,69,000 வருடத்திற்கு முந்தையது என்கிறார்கள். உலகில் நாகரீகம் உருவெடுத்தே சுமார் 10,000 வருடங்கள்தாம் இருக்கும். எழுத்து தண்டு பிடிக்கப் பட்டது அதற்கு பிறகுதான். ஆனால் பல லட்சம் வருடங்கள் முன்பே இராமாயணம்


படிப்பகம்

www.padippakam.com

சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது என்பதை எப்படி ஏற்க முடியும்? அதே போலத்தான் மகாபாரதம் போர் நடந்ததாகக் கூறப்படும் காலம் மட்டுமல்ல களம், கதா பாத்திரங்கள் அனைத்தும் நம்பக் கூடியதாக இல்லை.

உதாரணமாக மகாபாரதத்தில் 18 அக்ரோணியம் சைன்யங்கள் அணிவகுத்து நின்றதாகவும் அதில் 11 அக்ரோணியம் கவுரவர்களுடையது என்றும் 7 அக்ரோணியம் பாண்டவர்களுடையது என்றும் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| "21,870 தேர்படை x 18 | = | 3,93,660 ரதங்கள் |
| 21,870 யானைப்படைகள் x 18 | = | 3,93,660 யானைகள் |
| 65,610 குதிரைப்படை x 18 | = | 1,18,00,980 குதிரைகள் |
| 1,09,350 காலாட்படைகள் x 18 | = | 19,78,300 வீரர்கள் |

எந்த ஒரு நாட்டிலும் இவ்வளவு பெரிய போர்க்கள மைதானம்–இவ்வளவு பெரிய படைகள் இருக்க வாய்ப்புண்டா?"

**(கீதையின் மறுபக்கம்–பக்கம் 14)**

"1. வேத சாகித்யத்தில் எங்குமே மகாபாரதப் போரை பற்றி கூறப்படவில்லை.

2. பவுராணிகர்களுக்கு கூட மகாபாரதப் போர் எப்போது நடந்தது என்பது தெரியவில்லை.

3. கி.மு. 4ஆம் நூற்றாண்டிற்கு முன்னருள்ள எந்தவொரு இலக்கியத்திலும் மகாபாரதப் போர் பற்றி குறிப்பிடப்படவில்லை.

4. மகாபாரதப் போர் நடந்ததாகக் கூறப்படும் குருசேஷத்திரத்தை ஒரு போர் களமாக வேதங்களில் எங்கும் கூறப்படவில்லை.

இக்காரணங்களால் டாக்டர் சர்க்கார், ஏதோ ஒரு சிறிய கோத்திர வர்க்க யுத்தத்தை பெரிதுபடுத்தியதே மகாபாரதக் கதையென்று கூறுகிறார்"

**(பகவத் கீதை–ஓர் ஆய்வு–ஜோசப் இடமருகு பக்கம் 37,38)**

## இரும்பாயுதம் ஏது?

"மகாபாரதப் போர் நடந்ததாக கி.மு. 3100, கி.மு,1400, கி.மு. 900 என பல கட்டங்களை அறிஞர்கள் தருகின்றனர். இவ்வாறு கூறுபவர்கள் பெரும்பாலும் சமஸ்கிருத அறிஞர்களே. இவ்வருடங்களில் ஏதேனும் ஒன்றை நாம் அங்கீகரிப்பதற்கு முன்னால் அதனால் விளங்கும் பொருள் என்னவென்பதை அறிய வேண்டி இருக்கி



படிப்பகம்

www.padippakam.com

றது. இப்போதைய ஹரியானா, பஞ்சாப், சிந்து, குஜராத், சவுராஷ்டிரம், கூச், உத்தர பிரதேசம், பீகார், அசாம், காஷ்மீர் ஆகிய இடங்களில் அக்காலத்தில் பெரிய நாடுகள் இருந்தனவென்று நாம் கருத வேண்டி வரும். அது மட்டுமல்ல இந்த இடங்களில் எல்லாம் நாகரீகமும் கலாச்சாரமும் சிறந்தோங்கி இருக்க வேண்டும். அங்கிருந்த அரசர்களுக்கு பெரிய படைகளும் இருந்திருக்க வேண்டும்; அவற்றின் சரியான எண்ணிக்கை தெரியாவிட்டாலும் அவை அக்காலத்தில் இருந்ததற்கான ஆதாரம்கூட இல்லை."

"மொகஞ்சதாரோவிலும் ஹரப்பாவிலும் வாழ்ந்த மக்கள் இரும்பை அறிந்திருக்கவில்லை. கி.மு. 3000த்திலோ கி.மு. 4000த்திலோ நடந்ததாகக் கொண்டால் அவர்கள் மகாபாரதப் போரில் இரும்பாயுதங்களை பயன்படுத்த வில்லை என்று கருத வேண்டியிருக்கும் என்று டாக்டர் சாங்காலியா சுட்டிக் காட்டுகிறார். ஆனால் மகாபாரதத்தில் இரும்பாயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள் ளதாகக் கூறப்படுகிறது. கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முன் இந்தியாவில் இரும்பாயுதங்கள் பயன்படுத்தப்படவே இல்லை. குருஷேத்திரத்தில் நடந்த அகழ்வாராய்ச்சிகளில் இந்த மகாயுத்தத்தோடு சம்பந்தப்பட்ட எந்தத் தடயமும் கிடைக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

**(பகவத் கீதை ஓர் ஆய்வு –ஜோசப் இடமருகு–பக்கம் 38,39)**

ஆர்.ஜி. பண்டர்கார் என்பவர் நவீனகால இந்தியா பற்றி எழுதிய துவக்க கால வரலாற்றாசிரியர்களில் மிக முக்கியமானவர். அவரது கருத்து என்னவென்றால்;

"மகாபாரதமோ, இராமாயணமோ, நடந்த வரலாறு அல்ல; புராணங்களும் அவ்வாறே"

**(கீதையின் மறுபக்கம் பக்கம் 18)**

ராஜாராம் மோகன்ராய் மகாபாரதத்தின் துவக்கப் பாட்டுகளில் ஒன்றைக்காட்டி அதில் வியாசனே தனது காவியம் ஒரு கற்பனைக் காவியம் என்றே குறிப்பிட்டுள் ளான் என்பதை எழுதியுள்ளார்.

எப்படி சுற்றிச் சுற்றி வந்தாலும் புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும் மகாபாரதம் என்பது வரலாற்று நூல் அல்ல. ஒரு கற்பனைக் காவியம். எங்கோ நடந்த சில இனக் குழுக் களின் சிறு சண்டையை மையமாகக் கொண்டு பல கட்டங்களில் விரித்தும் திருத்தியும் எழுதப்பட்டதுதான் இன்று நாம் காணும் மகாபாரதமும், பகவத் கீதையும் எனில் மிகையன்று.

கீதையை தம் தாயென வர்ணித்த மகாத்மா காந்திகூட பகவத் கீதை ஒரு வரலாறு சார்ந்த படைப்பாக கருதவில்லை. அவர் கூறுகிறார்;


படிப்பகம்

www.padippakam.com

"1888–89–இல் முதன் முதலாக நான் கீதையை அறிய நேர்ந்தபோது அது ஒரு வரலாற்றுடன் தொடர்புடைய படைப்பு அல்ல" என்று உணர்ந்தேன். உண்மையான போர்க்களத்தில் நடந்தது என்கிற பெயரில் மனிதர்களின் இதயத்தில் நிகழ்ந்த இரு வேறுபட்ட எண்ணப் போராட்டங்களின் புனைந்துரைதான் அவ்வாறு வர்ணிக்கப்பட்டது என்கிறார்.

## கீதை எழுதியது யார்?

கீதை அருளப்பட்டதா? எழுதப்பட்டதா என்கிற கேள்விக்கு இனி விடை காண்பது எளிது.

"மகாபாரதம் என்ற இதிகாச காவியம் முழுவதையும் எழுதியவர் வியாசரே என்று பொதுவாக நம்பப்படுகிறது. ஆனால் வியாசர் எழுதியது அதன் மூல வடிவமான 'ஜெய' என்ற காவியம் மட்டும்தான் அதில் 8800 சுலோகங்கள் மட்டுமே அடங்கி இருந்தன என்பதை மகாபாரதம் ஆதி பர்வதத்திலுள்ள பின்வரும் சுலோகத்தால் அறியலாம்.

**''நாராயணம் நமஸ்க்ருதய நரம் சைவ நரோத்தமம்**
**தேவீம் ஸ்ரஸ்வதீம் சைவ ததோத் ஜயமுதீரயேத்''**

"வியாசர் எழுதியதாகக் கூறப்படும் இந்தக் காவியத்தை வைஸம்பாயன் 24000 சுலோகங்களாக விரித்து எழுதினார். அவர்தான் அதற்குப் பாரதம் என்று பெயரும் இட்டார். ஜனமே ஜய மன்னரின் நாகமண்டபத்தில் அவர் அதனை அரங்கேற்றியதாகச் சொல்லப்படுகிறது. நைமி சாரண்யத்தில் வைத்து ஜனகர் முதலியவர்களுக்கு கதை கூறிய சூதன் என்ற ஆச்சாரியார் பாரத இலக்கியத்தை சிறிது விரிவுபடுத்தி ஒரு லட்சம் சுலோகங்களாக எழுதினார் என்றும் அப்போது அதற்கு மகாபாரதம் என்று பெயரிட்டார் என்றும் கூறப்படுகிறது"

"இவ்வாறு மூன்று முறை பாரதம் திருத்தி எழுதப்பட்டதை வைதீக இந்துக்களே கூட ஒப்புக் கொள்கின்றனர். இதில் முதல் நூலாசிரியராக சொல்லப்படுகின்ற வியாசர் ஒரு தனிநபரா, ஒரே பெயரில் அழைக்கப்பட்ட குரு பரம்பரையா என்ற விஷயத்தில் கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன... சங்கராச்சாரியார், போப், பாத்ரியர்க்கீஸ் இவற்றைப் போன்ற பட்டப் பெயர்களே கண்வர், வியாசர், விசுவாமித்திரர் (மற்றும் தமிழ்நாட்டு ஔவையார்) முதலியவையும் அதனால் பல காலங்களில் ஒரே பெயர் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்"

"கிருஷ்ணத் வைபாயணன் 28வது வியாசராவார். யமுனா நதியிலுள்ள ஒரு தீவில் பிறந்ததால் அவருக்கு அந்தப் பெயர் கிடைத்தது. இவரைப் போன்ற பல



படிப்பகம்

www.padippakam.com

வியாசர்கள் பல காலமாக எழுதியவற்றையெல்லாம் சேர்த்து வடிவம் கொடுத்ததே மகாபாரதம் என்ற இதிகாசம். கி.மு. 200 முதல் கி.பி. 400 வரையுள்ள நீண்ட காலத்திற்குமிடையிலேயே இந்த இதிகாசம் வடிவம் கொண்டது."

**(பகவத் கீதை ஓர் ஆய்வு ஜோசப் இடமருகு–பக்கம் 48/49)**

இந்த இதிகாசத்தில் ஆரம்பத்திலேயே கீதை இருந்ததாகக் கருத எந்த வரலாற்று ஆதாரமும் இல்லை. அதே சமயம் அது பின்னர் யாரால் எப்போது எதற்காகச் சேர்க்கப்பட்டது என்பது முக்கிய கேள்வியாக நம்முள் உள்ளது. இன்னும் சில வரலாற்றுச் செய்திகளை அறிவதன்மூலமே இக்கேள்விக்கு விடை காணமுடியும்.

## புத்தரின் வீழ்ச்சிக்கு பிறகு

"வேத காலகட்டத்திற்குப்பின் ஏறத்தாழ கி.மு. 800 ஆம் ஆண்டளவில் பிராமணிய ஆதிக்கத்திற்கும் வைதீக மதத்திற்கும் எதிரான ஒரு சவால் என்ற நிலையில் பகுத்தறிவு வாதம் இந்தியாவில் தழைத்து வளர்ந்தது. சார்வாகன் , சாங்க்யன், புத்தன், வர்த்தமான மகாவீரன் முதலிய மகான்கள் ஒவ்வொருவராக களத்திற்கு வந்தனர். கிமு 8ஆம் நூற்றாண்டிற்கும் 4ம் நூற்றாண்டிற்கும் இடையில் இவர்கள் வாழ்ந்திருந்தனர். லோகாயுத சித்தாந்தங்களுக்கும் புத்த மதத்திற்கும் ஜைன மதத்திற்கும் அபிவிருத்தி ஏற்பட்டது...."

"புத்தமத நூல்கள் அடிப்படையில் அக்கால கட்டத்தில் அங்கம், மகதம், காசி உட்பட 16 நாடுகள் இருந்ததாக அறிய முடிகிறது. இவற்றில் பல பெயர் சொல்லும் அளவிலேயே நின்று விட்டன. மகதம் ஒரு பேரரசாக வளர்ந்தது. கி.மு. 7ஆம் நூற்றாண்டில் சிசுநாகன் என்பவன் அங்கே அரசனாக வந்தான். அவனுடைய பின் தலைமுறையைச் சார்ந்த பிம்பிசாரன் (கி.மு: 525–500) பாட்னாவிற்கு வடகிழக்கே 60 கல் தொலைவிலுள்ள ராஜக்குஹத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு நாட்டை நிறுவினான். ஜைன மதத்தைச் சார்ந்த பிம்பிசாரன் அம்மதத்தை அளவு கடந்து ஆதரித்தான். பிம்பிசாரனுக்குப்பின் அஜாத சத்ருவும் (கி.மு. 475–450) உதயனும் (கி.மு.450–425) ஆட்சி புரிந்தனர். இந்த ராஜகுடும்பத்தை ஒழித்து கி.மு 375ல் நந்தராஜ வம்சத்தை தோற்கடித்து சந்திர குப்த மவுரியர் மவுரியப் பேரரசை நிறுவினார். இந்திய வரலாற்றில் முதல் பேரரசு இதுவென்றே ஜோசப் இடமருகு கூறுகிறார். சந்திரகுப்தருக்குப் பின் பிந்து சாரனும் (கி.மு. 298–274) தொடர்ந்து அசோகரும் (கி.மு.274–236) மவுரியப் பேரரசர்களாயினர்."

"மவுரிய சாம்ராஜ்யம் அசோகருக்குப்பின் படிப்படியாக பலவீனமடைந்து கொண்டிருந்தது. கடைசி மவுரிய அரசரான ப்ருஹத்ரனைக் கொன்று அவனது தளபதியான புஷ்பமித்திரன் என்ற பிராமணன் சுங்கராஜ வம்சத்தை நிறுவினார்."


படிப்பகம்

www.padippakam.com

"புஷ்யமித்திரன் புத்தமதத்திற்கும் பவுதீக வாதத்திற்கும் (பொருள் முதல்வாதம்) பகைவராக விளங்கினான். அவன் ஆட்சிக்கு வந்தபின் அசோகருக்கு இவ்வளவு புகழ் கிடைக்கக் காரணம் என்ன என்று பலரிடம் விசாரித்தான். புத்த மதத்திற்காக அவன் 84000 தூண்களை கட்டியதே அதற்குக் காரணம் என்று சிலர் சுட்டிக் காட்டினர். இந்த தூண்கள் அனைத்தையும் உடைக்க ஆணையிட்டான். இதனைத் தொடர்ந்து மகத நாட்டிலுள்ள அனைத்து புத்தமதத் தூண்களும் விகாரங்களும் இடிக்கப்பட்டன. புத்த துறவிகள் கருணையின்றி கொல்லப்பட்டனர். லோகாயவாதிகள் பவுதீகவாதிகள் என அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் வேட்டையாடப்பட்டனர். ஜவாலுகன் என்ற மற்றொரு அரசன் தன் நாட்டிலிருந்த புத்த விகாரங்கள் அனைத்தையும் அழித்தான்."

"காஷ்மீரிலுள்ள கின்னர அரசன் செய்த ஒரு கொடிய கொலை பாதகத்தின் கதையை கல்ஹனர் குறிப்பிடுகிறார். புத்தமதத்தைச் சார்ந்த ஒருவன் ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தி விட்டான். அந்தக் குற்றத்திற்காக அரசன் தந்த தண்டனை என்ன தெரியுமா? அவனைக் கொன்றான். ஆயிரக்கணக்கான புத்த விகாரங்களை அழித்தான். அவை தொடர்புடைய புத்தமதத்தினர் வாழ்ந்த கிராமங்களை பிராமணர்களுக்குத் தானம் செய்தான்"

**(ஜோசப் இடமருகு–பகவத் கீதை ஓர் ஆய்வு)**

## பிராமண மத தத்துவ நூல்

"மவுரியர் காலத்திற்கு பிந்திய காலத்தில் அரசியலில் மோதல்கள், வீழ்ச்சிகள், சீரழிவுகள் நிறைந்திருந்தன. இருப்பினும் சிதைவுகள் ஏற்பட்ட பின்னரும் குஷாணர், சாகர், சாதவாகணர் முதலிய அரசர்கள் குறிப்பிடத்தக்க அளவில் பெரிய அரசுகளாகவே வெடித்தன."

"சமுதாயக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் இந்தக் காலத்தில் ஒரு தனித்தன்மையான நிலை வளர்ச்சி பெற்றது. உபநிடத மதத்திற்கு புத்தமதம் பல படி அடிகள் கொடுத்தது. ஆனால் அந்த அடியை அடுத்து உபநிடத மதம் திரும்பவும் எழுந்திருக்கவும் இல்லை. ஆனால் அதே சமயத்தில் உபநிடத சமுதாயத்தின் சமூக–சமயப் பிணைப்புகளை பலவீனப்படுத்துவதற்கு புத்தமதம் வலிமை கொண்டதாக இருப்பினும் அதற்கு அசோகரின் ஆதரவும் முயற்சிகளும் இருந்த போதிலும் அது சமுதாயத்தை மேலிருந்து கீழ்வரை பிணைக்கக்கூடிய வேறு புதிய பிணைப்புகளை உண்டாக்கவில்லை. அத்துடன் அந்த மதமும் பிற்காலத்தில் சிதைந்து விட்டது."

**(எஸ்.ஸி. சர்தேசாய்–திலிப் போஸ்–மார்க்சியமும் பகவத் கீதையும்)**



படிப்பகம்

www.padippakam.com

குறிப்பாக புத்தமதம் சீரழிந்தது ஏன் என்று தனியாகவே ஆராயப்பட வேண்டிய ஒன்று. சர்தேசாய், திலிப்போஸ் ஆகியோர் கருத்துப்படி முதலாவதாக புத்தர் தாம் அமைத்த சங்கங்கள் சாதி அற்றதாக, சொத்துக்கள் அற்றதாக அமைக்க முயற்சித்தார். இந்த கற்பனாவாத செயல்களுக்கும் அன்றைய வரலாற்று நிலைமைகளுக்கும் பொருந்திப் போகவில்லை. இரண்டாவதாக கடவுள், மதம், மூட நம்பிக்கை இவைகளைத் தாக்கினார் புத்தர். மறுபிறப்பு, மோட்சம் இவற்றை நிராகரித்தார். ஆனால் பலமான ஆளும் சுரண்டும் கூட்டத்தை எதிர்த்து போராடும் மக்கள் பலவீனமான மூடநம்பிக்கைகளில் சிக்குண்டு விடுவது இயல்பானது. இன்றும் தொடர்வது. புத்தரின் கொள்கைகள் தாக்கு பிடித்து நிற்க முடியாமல் வீழ்ந்தது. மூன்றாவதாக சாதிக்கோட்டையைத் தாக்க முயன்றார். அதனால் புத்தம் மழுங்கியதே தவிர சாதியம் தகரவில்லை. கடைசியில் புத்தருக்குப்பின் அம்மதமும் பிற மதங்களைப் போல் சொத்துடையவர்களுக்கு அடங்கி ஆடம்பர சுகபோகிகள் கூடாரமானது. இவ்வாறு புத்தமதம் வீழ்ந்தது. மவுரியப்பேரரசும் சிதைந்தது.

"மற்றொரு விஷயத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சாகர், குஷாணர்களுடைய படையெடுப்பு பாரசீக அரசன் சைரஸ் அல்லது கிரேக்க அரசன் அலெக்சாண்டர் படையெடுப்புகளைப் போல் அல்லாமல் வேறுவிதமாக நடந்தது. குறிப்பாக சாகர்கள், குஷாணர்கள் படையெடுப்பு வெறும் ராணுவத்தின் போர்த் தொழிலை தன் தொழிலாகக் கொண்ட படை வீரர்களின் படையெடுப்பைப் போன்ற தல்ல. அவர்களுடன் ஏராளமான மக்கள் கூட்டம், இனக்கூட்டம், பழங்குடி மக்கள் கூட்டம், படையெடுப்புகளுடன் பின்தொடர்ந்து வந்து இந்தியாவில் குடியேறி னார்கள். இது இந்த நாட்டில் இருந்த சாதி அமைப்பை நிலை குலைத்தது. இந்த நிலை குலைவு ஏற்கெனவே மகதர் காலத்தில் நாடு முழுவதும் பரவி இருந்தது"

**(மார்க்சியமும் பகவத் கீதையும்)**

"மகதர் காலத்தின் இறுதியில் ஒரு குறிப்பிட்ட தனித்தன்மையான சமுதாய இடைவெளி ஏற்பட்டது. அதை அடுத்து சமுதாய–சமய–சித்தாந்த இடைவெளி ஏற்பட்டது. இதை சூனிய நிலை என்று கூறலாம். (பொருளாதார அரசியல் அல்ல) சமுதாய அராஜகம் என்றுகூறலாம். பழையது மறைந்து விட்டது. புதியது இன்னும் பிறக்கவில்லை. அந்தக் காலத்தின் சமுதாயப் பரிணாம வளர்ச்சியின் கட்டத்தைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது ஒரு புதிய மதம் என்பது தேவையாக இல்லா விட்டாலும் பழையனவற்றைப் புதுப்பிக்க வேண்டியது அவசியம் அதிகம் ஏற்பட்டி ருக்கிறது."

"அந்த மதத்தின் வேதமே கீதை. அந்த மதம் குப்தர் காலத்தில் (கி.பி. 300 முதல் 500 வரை) முழு வளர்ச்சி அடைந்தது. அந்த மதம் ஸ்மிருதிகள், புராணங்கள்,


படிப்பகம்

www.padippakam.com

மகாபாரதம், கீதை ஆகியவற்றின் அடிப்படையில் பின்னப்பட்டிருந்தது. மகாபாரதமும் புராணங்களும் உண்மையில் குப்தர் காலத்தில்தான் அது இறுதி வடிவத்தையும் உள்ளடக்கத்தையும் பெற்றன."

(மார்க்சியமும் பகவத் கீதையும்)

**ஆக, பகவத் கீதை என்பது புத்தமத வீழ்ச்சிக்கு பிறகு—குப்த பேரரசு காலகட்டத்தில் பிராமண மதம் தன் மேலாதிக்கத்தை நிலைநிறுத்த உருவாக்கிய தத்துவ நூல் என்ற முடிவுக்கு வருவது தவிர்க்க இயலாதது.**

## யார் கிருஷ்ணன்?

அடுத்த கேள்வி கீதையை அருளியதாகக் கூறப்படும் கிருஷ்ணன் ஒரு வரலாற்று நாயகனா? அல்லது கற்பனைப் பாத்திரமா?

கி. வீரமணி கீதையின் மறுபக்கம் நூலில் கிட்டத்தட்ட 40 பக்கங்கள் அந்த ஆய்விற்கு ஒதுக்கி இருக்கிறார் (பக்கம் 39 முதல் 79 வரை). இதில் பகுத்தறிவுக்கு ஒவ்வாத பல விஷயங்கள் குறித்து கேள்விக்கணைத் தொடுத்திருக்கிறார். காதல் லீலைகள், அவதாரத் தன்மை என்ற இரண்டு முரண்பட்ட தன்மைகள் குறித்து பல்வேறு ஆதாரங்களுடன் விவரித்துள்ளார். ஆயினும் அதுபோல் "கிருஸ்துவும் கிருஷ்ணனும் கற்பனையே" எனும் 88 பக்கங்களை கொண்ட சிறிய நூலில் ஜோசப் இடமருகு புத்தருக்கு பின்னர் தோன்றிய கற்பனையே கிருஷ்ண அவதார மும் கிருத்து பிறப்பும் என்று நிறுவ முயற்சித்திருக்கிறார். படிக்க மிகவும் சுவையான நூல்கள் அவை. வாசகர்கள் வாய்ப்பு கிடைத்தால் வாங்கிப் படிக்கவும்.

அதே சமயம் மார்க்சியமும் பகவத் கீதையும் எனும் நூலில் எஸ்.ஸி. சர்தேசாயும் திலிப் போசும் கூறியுள்ள கீழ்க்கண்ட வரிகள் முக்கியமானவை;

"...பண்டைய காலத்தில் எல்லா நாடுகளிலும் சமுதாய சிந்தனையில், சமுதாயக் கற்பனையில் அன்றைய கால சமுதாய அமைப்பு நிலைக்கு ஒரு பெரிய மனிதர் அவசியப்பட்டதால் அத்தகையவர்கள் வந்திருக்கிறார்கள்."

"இந்திரன் என்பவன் இருந்திருக்கிறானா? இல்லை. அதுவும் கற்பனைதான். இருப்பினும் ரிக்வேத காலத்து சமுதாயம் என்பதை இந்திரனுடைய பாத்திரம் இல்லாமல் கருதிப்பார்க்க முடியாது. இப்போது கிருத்துவனுடைய வரலாற்றுத் தன்மையும் வாதத்திற்குரிய பிரச்சனையாக இருப்பதைக் காணலாம்."

"எனவே கீதை என்னும் சங்கை யார் ஊதி இருந்தாலும் அவர்தான் கிருஷ்ணன். அந்தப் பாடப்பொருளை அறிவியல் பூர்வமாக ஆய்ந்திட அது போதுமானது"

இனி கீதையின் உள்ளடக்கம் குறித்த ஆய்விற்கு செல்வோம்.



படிப்பகம்

www.padippakam.com

# II- கீதையின் முரண்பாடுகள்

"கீதை என்பது 700 செய்யுள்களைக் கொண்ட பகவத் கீதையை மட்டும் குறிக்கவில்லை; ஆன்மிக ஞானத்தைப் போதிக்கும் இதர நூல்களும் பொதுவாக கீதை என்ற பெயரிலேயே வழங்கப்படுவதை நாம் காண்கிறோம். மகாபாரதத்தில் சாந்தி பர்வதத்தில் அடங்கிய மோட்சா பர்வதத்தின் சில அத்தியாயங்களில் பிங்கள கீதை, சம்பாக் கீதை, மங்கி கீதை, போத்ய கீதை, விசக்யு கீதை, ஹரித கீதை, விருத் தர கீதை, பராசர கீதை, அம்ச கீதை, ஆகிய பெயர்கள் இடம் பெற்றிருப்பதையும் அஸ்வமேத பர்வதத்தில் அநுகீதையின் ஒரு பகுதி 'பிராமண கீதை' என்று பெயர் பெற்றிருப்பதையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம்"

"இவை தவிர, இன்னும் எண்ணற்ற கீதைகளும் உள்ளன. அவதூத் கீதை, அஷ்டாவக்ர கீதை, ஈஸ்வர கீதை, கபில கீதை, கணேச கீதை, தேவி கீதை, உத்ர கீதை, பாண்டவ கீதை, பிரம கீதை, பிட்சு கீதை, யம கீதை, ராமகீதை, வியாச கீதை, சிவகீதை, சுவ கீதை, சூர்ய கீதை ஆகியவற்றை இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிடலாம். இவற்றில் சில தனிநூலாக உள்ளன மற்றவை, பல்வேறு புராணங்களில் காணப்படுகின்றன."

**(கி. வீரமணி–கீதையின் மறுபக்கம்)**

இவை எப்படியோ போகட்டும். பகவத் கீதை என்று இன்று எல்லோராலும் கொண்டாடப்படுகிற கீதையையே நாம் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறோம்.

"கீதை உபதேசிக்கப்பட்ட இடமோ யுத்த பூமி, போர்க்களம்; அப்படிப்பட்ட இடத்தில் 700 செய்யுள்களைக் கொண்ட பகவத் கீதையை கிருஷ்ண பரமாத்மா, அர்ஜுனனுக்கு உபதேசம் செய்வதற்கு எப்படி அவகாசம் கிடைத்திருக்க முடியும்?"

**(கி. வீரமணி–கீதையின் மறுபக்கம்)**

"700 சுலோகங்களாக கீதை எழுதப்பட்டுள்ளது. அதை எவ்வளவு வேகமாகச் சொன்னாலும் சொல்லி முடிய மூன்று மணிநேரம் வேண்டும்; அந்த நேரத்தில் போரில் தோல்வி ஏற்படலாம்"

## கேள்வி கேட்க கூடாது

இப்படி எல்லாம் கேள்வி எழுப்புவதை எப்போதும் மதம் அனுமதிப்பதில்லை.

**"யோவமன்யேத் தே முலே ஹேது சாஸ்த்ராஸ் ராத்யாத் த்விஜ!**
**ஸ் ஸாது பிர்ப ஹிஷ்கார்யோ**
**நாஸ்திகோ வேதநின்தக்!!**


படிப்பகம்

www.padippakam.com

"வேதங்களுக்கும்... ஸ்மிருதிகளுக்கும் பொருள் கூறுவதில் பகுத்தறிவைப் பயன்படுத்துவது முழுமையாக கண்டனத்துக்கு உரியதாகும். பகுத்தறிவைப் பயன் படுத்துவது நாத்திகத்தைப் போலவே பாவமானது"

இப்படி மனு கூறியது. பகவத் கீதைக்கு பாஷ்யம் எழுதிய – விளக்கவுரை எழுதிய – வியாக்கியானம் செய்த அத்தனை ஆன்மீகப் பெரியவர்களும் பகவத் கீதையை பக்தியோடுதான் அணுக வேண்டும்; பகுத்தறிவோடு அணுகக்கூடாது என்று தடையே போடுகின்றனர்.

"எனக்கும் பகவத் கீதைக்கும் உள்ள தொடர்பு பகுத்தறிவை மீறியதொன்று... உள்ளத் தொடர்பு உள்ள இடத்தில் தர்க்கத்திற்கு இடம் இருப்பதில்லை" என்கிறார் வினோபா பாவே.

"திருடனைக் கண்டுபிடிப்பதற்காக வீட்டில் சோதனை செய்ய நுழையும் போலீஸ்காரன் மனோபாவத்துடன் கீதையையாவது, பிறமதத்தவர் கௌரவிக்கும் மார்க்க தரிசன நூல்களையாவது படிப்பதில் பயனில்லை; படித்தலும் கூடாது. மார்க்க நூல்களைப் படிக்கும்போது தகப்பனிடம் மகன் நெருங்குவதுபோல் பக்தியும் அன்பும் கொண்டு நெருங்க வேண்டும்" என்கிறார் "கண்ணன் காட்டி வழி" என்ற நூலில் ராஜ கோபாலாச்சாரியார்.

ஹரே கிருஷ்ணா இயக்கத்தைச் சார்ந்த பக்தி வேதாந்த சுவாமிபிரபுவும் அதையே வழி மொழிகிறார். "கீதையை படிக்கும் முன்பே அதனிடம் முழு பக்தி விசுவாசம் கொண்டு பகவான் கண்ணனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டே படிக்க வேண்டும்" என்றார். மேலும் அவர் கூறுகிறார்: "எனவே பகவத் கீதை பக்தி உணர்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதை ஒருவன் பணியும் பண்போடு படித்தாலொழிய அதைப் புரிந்து கொள்ளுதல் மிகக் கடினமானது. ஏனென்றால் அது ஒரு பெரும் புதிரான ரகசியம்"

இது பகவத் கீதைக்கு மட்டும் விதிக்கப்பட்ட சாபம் அல்ல. விசுவாசிக்கிறவன் சொர்க்கத்துக்கு போவான். சந்தேகிக்கிறவன் நரகத்துக்கு போவான் என்பதைதான் பைபிளும் போதிக்கிறது. குரானிலும் இதே நிலைதான். புத்தர் ஒருவர் மட்டுமே புத்திக்கு வேலை கொடுக்கச் சொன்னார். அப்புறம் புத்தமதத்திலும் அப்பாதை அடைக்கப்பட்டுவிட்டது. .... எல்லாவற்றையும் சந்தேகி.. என்ற காரல் மார்க்ஸ் அணுகுமுறையே அறிவியல் உலகின் திறவுகோல். கேள்வி கேட்காமல் புதிர்களுக்கு விடைகிடைக்காது. தெளிவு பிறக்காது.



படிப்பகம்

www.padippakam.com

## ஒரே நூலில் இத்தனையா?

கீதையை யார் யார் எப்படிப் புரிந்து கொள்கிறார்கள் என்பதைப் பார்த்தால் வேடிக்கையாகவும், விநோதமாகவும் இருக்கும். இத்தனையும் ஒரே நூலில் எப்படி என்கிற வியப்பு மேலிடும்.

"முதலாவதாக எடுத்துக் கொண்டால் ஆதி சங்கரர் கீதையில் 'ஆன்மீக' அறிவிற்கும் துறவறத்திற்குமான சிறப்புச் செய்தியை (ஞானமும் சன்னியாசியமும்) கண்டார். மற்றும் சைதன்யர், ஞானேஸ்வரர் முதலிய முனிவர்கள் கவிஞர்களுக்கு கீதை என்றால் பக்தி என்று பொருள்பட்டது. அளவு கடந்த அன்பு, அர்ப்பணத்தின் மூலம் கடவுளிடம் எவ்விதமான நிபந்தனையுமின்றி தன்னைத்தானே ஈடுபடுத்திக் கொள்வது என்று பொருள்பட்டது. லோகமான்ய திலகருக்கு அது கர்மயோகம் எனக் காட்டியது. எவ்விதமான பிரதிபலனையும் எதிர்பாராமல் செயலில் ஈடுபடுவது எனக் காட்டியது. இன்னும் கூறப்போனால் திலகருக்கு கீதை, சத்தம் பிரதி சாத்தியம் என, அதாவது எதிரி எப்படி வருகிறானோ அப்படி அதே முறையிலேயே அவனுக்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தது. அதற்கு நேர்மாறாக மகாத்மா காந்திக்கு கீதை என்றால் 'சத்தியம்' 'வாய்மை' என்றுபட்டது. களங்கமற்ற எவ்விதமான மாசும் மருவும் அற்ற–வன்முறை பற்றி துளியும் சிந்தனை இல்லாத–கேடுகளை அண்ட விடாத சக்தியாகப்பட்டது."

"இன்னும் கோல் வால்கர் கீதையிலிருந்து கற்றுக் கொண்டிருப்பது; முஸ்லிம்கள் இந்த நாட்டிற்கு அந்நியர்கள் அவர்கள் ஒழிக்கப்பட வேண்டியவர்கள்..." இன்றைய சங்கராச்சாரியார் அன்றொரு நாள் பூனாவில் பேசும்போது பெண்களும் சூத்திரர்களும் விலக்கப்பட வேண்டியவர்கள். காரணம் அவர்கள் பாபயோனியில், பாவத்தில் பிறந்தவர்கள் என்று கீதை குறிப்பிடுகிறது என்றார். எல்லாவற்றிற்கும் மேலாக இன்னும் கிருஷ்ணலீலா சபையினர் இந்த சுவர்க்க கீதங்கள் எல்லா லீலைகளையும் சுயேட்சையான காதல் ஒழுக்கங்களையும் காட்டுகிறது என்று கண்டுபிடித்துள்ளனர்."

**(மார்க்சியமும் பகவத் கீதையும்)**

இப்படி ஆளுக்கு ஆள் அவரவர் தேவைக்கு ஏற்ப அர்த்தம் கொள்ளும் நிலை ஏன் ஏற்பட்டது? கீதை என்பது அத்தனை முரண்பாடுகளின் மூட்டையாக இருக்கிறது. அதுதான் உண்மை. அதைச் சற்று புரட்டிப் பார்ப்போம்.

## கை நழுவும் காண்டீபம்

"கண்ணா, போர் செய்ய வேண்டி இங்கு திரண்டு நிற்கும் சுற்றத்தார்களை கண்டு, என் அவயங்கள் சோர்கின்றன, என் வாய் உலர்கிறது. என்னுடைய உடம்பு


படிப்பகம்

www.padippakam.com

நடுங்குகிறது. மயிர் சிலிர்க்கிறது. காண்டீபம் கையிலிருந்து நழுவுகிறது. உடம்பில் எரிச்சல் உண்டாகிறது. என்னால் நிற்க முடியவில்லை.என் மனம் சுழல்கிறது."

**(பகவத் கீதை 1.28,29,30)**

"யாவர் பொருட்டு நாம் ராஜ்யத்தையும் போகங்களையும் இன்பங்களையும் விரும்புகிறோமோ அவர்கள் உயிரையும் செல்வங்களையும் துறந்தோராய் இங்கு வந்து நிற்கிறார்கள்.. குருக்களும், தந்தையரும், மக்களும், பாட்டன்மாரும், மாதவரும், மாமன்மாரும், பேரரும், மைத்துனரும் சம்பந்திகளும் (இங்குளர்), மதுசூதனா, யான் கொல்லப்படினும் இவர்களை கொல்ல விரும்புகிலேன், மூவுலகின் ஆட்சி பெறுதற்கெனினும் (இது செய்யேன்) பூமியின் பொருட்டு செய்வேனா!

**(கீதை 1.33,34,35)**

"ஜனார்த்தன்! குலநாசத்தால் ஏற்படும் குற்றத்தை உணர்ந்த நாம் இப்பாவத்தினின்று விலகும் வழியறியாதிருப்பது என்ன? **(1.39)**

(குலநாசம் வர்ண அழிவு குறித்து இந்நூலில் இன்னொரு பகுதியில் விளக்கப்பட்டுள்ளது)

இவ்வாறு அர்ச்சுனன் புலம்பி வில்லைக் கீழே போடுகிறார்.

அதற்கு கிருஷ்ணன் கூறுகிறான்.

"இவன் கொல்வானென்று நினைப்போனும், கொல்லப்படுவோனென்று நினைப்போனும் இருவரும் அறியாதார். இவன் கொல்லுவதுமில்லை, கொலையுன்பதுமில்லை."

"இவன் பிறப்பதுமில்லை; எக்காலத்திலும் இறப்பதுமில்லை. இவன் ஒரு முறையிருந்து பின்னர் இல்லாது போவதுமில்லை. இவன் பிறப்பற்றான். அனவரதன். இவன் சாசுவதன்; பழையோன்; உடம்பு கொல்லப்படுகையில் இவன் கொல்லப்படுவான்."

## கொல்வது எதனை?

"இப்பொருள் அழிவற்றது. பிறப்பற்றது, என்று முளது இங்கன முணர்வோன் கொல்வதெவனை? அவன் கொல்விப்பதெவனை?

"நைந்த துணிகளை கழற்றி எறிந்து விட்டு மனிதன் புதிய துணிகளை கொள்ளுமாறு போல, ஆத்மா நைந்த உடல்களை களைந்து புதியனவற்றை எய்து கிறான். இவனை ஆயுதங்கள் வெட்டமாட்டா; தீ எரிக்காது, நீர் இவனை துளைக் காது. காற்று உலர்த்தாது"

**(கீதை 2. 19,20,21,22)**



படிப்பகம்

www.padippakam.com

இப்படி 'ஆத்மா' குறித்து கண்ணன் சொன்னபோதும் அர்ச்சுனன் அசைய வில்லை. அப்புறம் கண்ணன் தொடர்வான்.

"தொழில் செய்யத்தான் உனக்கு அதிகாரம் உண்டு, அதன் பயன்களில் உனக்கு எப்போதும் அதிகாரமில்லை, செய்கையின் பயனைக் கருதாதே. தொழில் செய்யாமலும் இராதே" **(கீதை 2.47)**.

"துன்பங்களிலே மனங்கெடாதவனாய், இன்பங்களிலே ஆவலற்றவனாய், அச்சமும் சினமும் தவிர்த்தவனாயின் அம்முனி மதியில் உறுதி வாய்ந்தவன் என்ப"

**(கீதை 2.56)**

இப்படிப்பட்டவனை "ஸ்திதப் பிரக்ஞன்" என உயர்த்திக் கூறி யுத்தம் செய்ய கண்ணன் தூண்டுகிறான்.

அர்ஜுனன் விடவில்லை, கேட்கிறான்.

"ஜனார்த்தன! செய்கையைக் காட்டிலும் புத்தியே சிறந்தது என்பது நின் கொள்கையாயின் இந்த கொடிய செய்கையில் என்னைப் புகுத்துவதென்ன கேசவா?" **(கீதை 3.1)**

அப்போதும் அர்ஜுனன் போருக்கு உடன்படாதபோது கண்ணன் கூறுவான்;

"எல்லா அறங்களையும் விட்டு விட்டு என்னையே சரண்புகு, எல்லா பாவங்களினின்றும் நான் உன்னை விடுவிக்கிறேன், துயரப்படாதே!

**(கீதை 18.66)**

கிருஷ்ணன் சட்டென்று நழுவுகிறான்

## ஆசை வார்த்தை

"ஆதலால், பற்றுநீங்கிச் செய்யத் தக்கச் செயலை செய்து கொண்டிரு. பற்றில் லாமல் தொழில் செய்து கொண்டிருக்கும் மனிதன் பரம் பொருளை எய்துகிறான்"

"எல்லாச் செயல்களையும் உள்ளறிவினால் எனக்கு அர்ப்பணமாகத் துறந்து விட்டு ஆசை நீங்கி எனது என்பது அற்று, மனக்காய்ச்சல் தீர்ந்தவனாய் போர் செய்யக் கடவாய்"

**(கீதை 3.19,30)**

இப்படி நிஷ்காமிய கர்மம் பற்றி உபதேசித்த பின்னரும் இங்கே கண்ணன் முரண்படத் துவங்குகிறான். "ஆசை நீங்கி போர் செய்" என கூறுபவன் அவனே. அதே சமயம்,


படிப்பகம்

www.padippakam.com

"கொல்லப்படினோ வானுலகம் எய்துவாய். வென்றால் பூமியாள்வாய். ஆகவே போர் செய்ய துணிந்து எழுந்து நில்" (கீதை 2.37) என்று ஆசை காட்டுபவனும் அவனே.

இவற்றையெல்லாம் விட வேடிக்கை என்னவெனில் எவ்வளவு ஆன்ம போதனை செய்தபோதும் அர்ஜுனன் கலக்கம் முற்றும் தீராதபோது கண்ணன் விசுவரூப மெடுத்து தன் வாயைத்திறக்க அதில் அண்ட சராசரமே தெரிகிறது. அர்ஜுனன் தெளிவு பெறுகிறான், அப்போதும் கண்ணன் கூறுகிறான்;

## செத்த பாம்பை அடி

"உலகத்தை அழிக்கத் தலைப்பட்ட காலமே நான் மனிதர்களை இங்கு கொல்லத் தொடங்கியுள்ளேன். இங்கு இரு திறத்துப் படைகளிலே நிற்கும் போராட்கள் அனைவரினும் உன்னைத்தவிர, வேறு யாரும் மிஞ்சமாட்டார்கள்."

"ஆதலால் நீ எழுந்து நில்; புகழெய்து; பகைவரை வென்று செழிய ராஜ்யத்தை ஆள். நான் இவர்களை ஏற்கெனவே கொன்றாகி விட்டது. இடக்கை வீரா! நீ வெளிக் காரணமாக மட்டும் நின்று தொழில் செய்"

"துரோணனையும், பீஷ்மரையும், ஜயத்ரதனையும், கர்ணனையும் நான் கொன்றாகி விட்டது. (வெளிப்படையாக) நீ கொல். அஞ்சாதே; போர் செய்! செருக்களத்தில் நின் பகைவரை வெல்வாய்!

**(கீதை 11.32, 33, 34)**

செத்த பாம்பை மீண்டும் அடித்துக் கொல் என்றால் கோழைகூட கோபப்படு வான். ஆனால் மாவீரன் அர்ச்சுனனிடம் கண்ணன் கூறியது என்ன? நான் ஏற்கெனவே அவர்களை கொன்று விட்டேன். நீ ஒப்புக்கு அடித்துக் கொல். வெற்றி உனக்கு–இப்படித்தானே மேலே சொன்னதற்கு பொருள் கொள்ள முடியும்.?

"ஆசையில்லாமல்–பற்றில்லாமல் செய்" என ஓரிடத்திலும், இதை செய்தால் எல்லா இன்பமும் உனக்கு கிடைக்கும்" என பிறிதோர் இடத்திலும், "புத்தி பூர்வமாக காரியமாற்று" என ஓரிடத்திலும், "என்னை கேள்வி முறையின்றி சரணா கதி அடைக!" என பிறிதோர் இடத்திலும்; 'மனந்தளராமல் போரிடு' என ஓரிடத்திலும்; "ஏற்கெனவே கொன்று விட்டேன் மீண்டும் செத்த பாம்பை அடி" என பிறிதோர் இடத்திலும்– என முரண்பாடுகளின் மூட்டையாக உபதேசிப்பதுதான் கீதையின் "ஸ்பெஷல்" போலும்

இதைப் போலவே, ஞானம், கர்மம், மோட்சம், இவை பற்றியும் மாற்றி மாற்றி பேசுவதை கீதையில் பரக்கக் காணலாம்.



படிப்பகம்

www.padippakam.com

இப்படி முரண்பாடுகளை மாறி மாறி பேசுகிற கண்ணன் நீ யார் என்று கேட்டு விட்டால் போதும்;

"வானவா கணங்கள் என் மகிமையை உணரார், பெருந்தகை முனிவரு முணரார்; யாங்கணும் வானோர் கட்கும் மகாிஷிகட்கும் ஆதி நானே"

**(கீதை 10–2)**

நானே ஆதி, நானே பெரிய கடவுள் என்றவன் தொடர்கிறான்; "பிறப்பதில்லான், தொடங்குதலில்லாதான், மானிடருக்குள்ளே மயக்கந் தீர்த்தான், பாவமனைத்திலும் விடுதலைப்பட்டார்"

இப்படி சொன்னால் பல தெய்வங்கள் பெயர்கள் வருமே அதற்கும் பதில் வைத்திருக்கிறான்.

"நான் ஒமம்; நான் யாகம்; நான் 'ஸ்வாகா' என்ற வாழ்த்துரை; நான் மருந்து; நான் மந்திரம்; நான் நெய்; நான் தீ; நான் அவி (கீதை 9.16) இந்த உலகத்தின் அப்பன் நான்; இதன் அம்மா நான்; இதைத் தரிப்போன் நான்; இதன் பாட்டன் நான்; இதன் அறியப்படு பொருள் நான்; தூய்மை செய்வது நான் ஓங்காரம் நான்; நான் ரிக்; நான் ஸாமம்; நான் யசூர்(கீதை 9.17) "ஆதித்தியர்களில் நான் விஷ்ணு" (10.21) "வேதங்களிலே நான் சாமவேதம்" (10.22) ருத்திரர்களில் நான் சங்கரன் (10.23) "மகிரிஷிகளில் நான் பிருகு (10.25)" "நாகர்களில் நான் அந்தன்"(10.29) "அசுரரில் நான் பிரகலாதன்" (10.30) "மனிதரில் அரசன்"(10.27) "சித்தர்களில் கபிலமுனி"(10.20) "வஞ்சகனின் சூது நான்"(10.36) எதெது பெருமையுடைத்து, உண்மையுடைத்து, அழகுடைத்து, வலிமையுடைத்து–அதுவெல்லாம் எனது ஒளியின் அம்சத்தில் பிறந்ததென்று உணர் (10.41)

இப்படி சகலத்துக்கும் நானே. சகலதும் நானே என தன்னைத்தானே கிருஷ்ணன் கீதையில் கூறிக் கொள்கிறான்.

"அன்றைய தேவதைகளை நம்பிக்கையுடன் தொழும் அன்பரும், குந்தியின் மகனே, விதி வழி என்னையே தொழுகிறான்."

இப்படி எந்த தெய்வத்தைக் கும்பிட்டாலும் அந்த தெய்வமெல்லாம் கூட நான்தான் என்று பிரகடனப் படுத்துகிறான் கண்ணன். அப்படியானால் மசூதியை இடிப்பது ஏன்? புத்த விகாரங்களை உடைப்பது ஏன்? பிற மதத்தினர் பால் விஷங்கக்கும் துவேஷம் ஏன்? மதப்பூசல்கள் ஏன்? ஏன்?

இப்படி யாரையும் வணங்கு–எப்படியும் வணங்கு எல்லாம் நானே என்றவன் தடாலடியாக சுருதியை சட்டென இறக்கிக் கூறுகிறான்.



படிப்பகம்

www.padippakam.com

"மிகவும் கொடிய நடையோனாயினும் பிறிது வழிபடாதே! என்னை வழிபடுவோன் நல்லோன் என்றே கருதுக; நன்கு முயல்கிறான் ஆதலின்" (9.30)

### ரப்பர் இழுவை மாதிரி

இப்படி ரப்பர் இழுவை மாதிரி யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் வியாக்கியானம் செய்துகொள்ள சமாதானம் செய்து கொள்ள ஏதுவாக "அகிம்சையைப் போதிக்கும் நூலாகவும்" "கொலை செய்யத் தூண்டும் போர் நூலாகவும்" "சகலத்தையும் மறக்கச் சொல்லும் துறவு நூலாகவும்" "எல்லாவற்றையும் அனுபவிக்கச் சொல்லும் லௌகீக நூலாகவும்" "மன உறுதியைப் போதிக்கும் மனோதத்துவ நூலாகவும்", "கேள்வி கேட்காமல் சரணடையச் சொல்லும் சரணாகதி நூலாகவும்" "எதை நம்பினாலும் நானே என்று பரந்த மனம் காட்டும் விசால நூலாகவும், என்னை நம்பினாலே உய்வடைவாய் எனக் காட்டும் சுருங்கிய நூலாகவும்", "தூய்மையும் நான்", "வஞ்சகமும் சூதும் நான்" என மாறி மாறி காட்சி அளிக்கும் இந்நூலின் உண்மையான சாரம் எது? நோக்கம் எது? அதுதான் மிகப் பெரிய கேள்வி. அதற்கு விடை கண்டால் இந்துமதத்தின் சாரமே புரிந்து போகும்; புதிய ஞான ஒளியே கிட்டும். அடுத்த அத்தியாயத்தில் அதனைப் பார்ப்போம்.

## III - கீதையும் அடிப்படை நோக்கமும்

கீதை ஐயத்திற்கு இடம் இன்றி தெள்ளத்தெளிவாக சதுர்வர்ணம் குறித்து உரக்கப் பேசுகிறது. அது கடவுளின் கட்டளை என்றே அதனை நிலை நிறுத்த முயல்கிறது. இது பற்றி பார்க்கும் முன் ஒரு கேள்வி எழுகிறது. "நான்கு வர்ண சமூகம்" எப்படி உருவானது? இது குறித்து பல்வேறு ஆய்வுகள் உள்ளன. இன்றும் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவும் வேண்டும். இந்துமதத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்ட டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறுவதையே ஜோசப் இடமருகு மேற்கோள் காட்டுகிறார்.

"நான்கு வருணங்களாக இந்து சமுதாயம் பிரிக்கப்பட்டிருப்பதைப் பற்றிய முதல் குறிப்பு புருஷ சூக்தத்தில் உள்ளது. ஆரம்பகால ஆரியர்கள் அனைவரும் ஒரே வருணத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். அவர்களில் ஒவ்வொருவரும் புரோகிதனாகவும் படை வீரனாகவும் வணிகனாகவும் விவசாயியாகவும் இருந்தனர். தனி உரிமைபெற்ற புரோகித வர்க்கம் அன்று இருக்கவில்லை. ஆனால் வாழ்க்கையில் தேவைகள் ஆரியர்களிடையே வருண வேறுபாடு ஏற்படக் காரணமாகி விட்டது"

டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறுவதை சாதியத் தோற்றத்தின் அடிப்படையாகக் கொள்வதில் ஆய்வாளர்களிடையே மாறுபாடுகள் உண்டு. சாதியம் பற்றி ஆய்வு



படிப்பகம்

www.padippakam.com

இன்னும் முற்றுப் பெறாதது. ஆயினும் ராதாகிருஷ்ணன் கூற்றுப்படி இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றன.

**1. சமூகத்தின் தேவைகளில் இருந்தே வருண வேறுபாடு தோன்றியது.**

**2. புருஷ சூக்தத்தில்தான் இதுபற்றிய முதற் குறிப்பு காணப்படுகிறது.**

## அம்பேத்கார் கேள்வி

ஒரு வளரும் சமூகம் தன் வளர்ச்சி நிமித்தம் வேலைப் பிரிவினைகள் செய்து கொள்வது இயல்பு. இது குறித்து அம்பேத்கார் கூறுவது சற்று கவனிக்கத்தக்கது.

"சாதி அமைப்பு என்பது தொழில் பிரிவினையின் மறுபெயரே. நாகரீகச் சமுதாயம் ஒவ்வொன்றிலுமே தொழில் பிரிவினை என்பது தேவையான ஒரு அம்சமாக உள்ளது. எனவே சாதி அமைப்பில் தவறேதும் இல்லை என்னும் வாதம் உள்ளது. இந்த வாதத்திற்கு எதிராக வலியுறுத்திக் கூறப்பட வேண்டிய முதல் விஷயம் என்னவென்றால் சாதி அமைப்பு தொழில்களை மட்டும் பிரிப்பதில்லை, தொழிலாளர்களையும் பிரித்து விடுகிறது. நாகரீக சமுதாயங்களுக்குத் தொழில் பிரிவினை தேவை என்பதில் ஐயம் ஏதும் இல்லை. ஆனால் எந்த நாகரீக சமுதா யத்திலும் தொழில் பிரிவினையானது தொழிலாளர்களையே ஒரு செயற்கையான முறையில் இறுக்கமான தனித்தனித் தீவுகளுக்கு பிரித்து விடுவதில்லை."

எனவே இந்திய சமூகத்தில் தொழில் பிரிவினைக்கும் மேல் ஒரு இறுக்கமான கரடு தட்டிப்போன சமூக திட்டுகளாக சாதி அடுக்குகள் உருவானது. அது அன்றைய ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்த தேவைப்பட்டது. ஆயினும் புத்தரின் வருகையால் பிராமணிய ஆதிக்கம் தகர்ந்தது. அதன்பின் அசோகருக்கு பின் புஷ்யமித்திரன் காலத்தில் பிராமணிய மேலாதிக்கத்தை மீண்டும் நிலை நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வர்ணாஸ்ர தர்மம் ஒரு தத்துவ அடித்தளத்தில் சமூகச் சட்டமாக மாற்றப்பட்டது. சுமதி பார்க்கவர் என்பவரால் மனுவிதிகள் புஷ்யமித்திரன் காலத்தில் தொகுக்கப்பட்டன. அந்த மனுவில் பிராமணர்களுக்கு கொடுக்கப்பட்ட இடமே அதற்கு சாட்சி.

## பிராமணர் ஆதிக்கம்

"(பிரம்மாவின்) வாயிலிருந்து பிராமணன் பிறந்ததாலும் அவன்தான் முதலில் பிறந்தவன் ஆதலாலும் வேதங்களுக்கு உரிமையாளன் ஆதலாலும் அவன் வலிமையின் காரணமாக அனைத்துப் படைப்புகளின் எசமானன் அவனே."

**(மனு I.93)**

"அனைத்துப் படைப்புகளிலும் மிகச்சிறந்தது உயிரினங்களே. அவற்றில்



படிப்பகம்

www.padippakam.com

மிகச்சிறந்தவர்கள் தம் உயிராய் வாழ்பவர்களே; அறிவில் சிறந்தது மனித குலம்; அதிலும் சிறந்தவர்கள் பிராமணர்களே.

(மனு I.96)

"இந்த உலகில் உள்ள அனைத்துமே பிராமணர்களுக்குச் சொந்தமானது. தம் பிறப்பின் மேன்மை காரணமாக இவ்வனைத்துமே அவனுக்கு உரியதாக்கப்படுகின்றது."

"பிராமணன் (பிறரிடமிருந்து தானமாகப் பெற்று) உண்கின்ற உணவு அவனுடையதே; உடுத்துகின்ற உடை அவனுடையதே; அவன் பெறுகின்ற தர்மமும் அவனால் (ஒரு காலத்தில்) தரப்பட்டதே;மற்றவர்கள் அவன் இரக்க குணத்திலே தான் உயிர் வாழ்பவர்கள் ஆகிறார்கள்."

(மனு I.101)

இப்படி பிராமணனை உயர்வாகப் பேசியதுடன் பிற வர்ணத்தாருக்கு மிகவும் கீழான நிலை அளித்தது. அதை முழுவதுமாக பரிசீலிப்பது இக்கட்டுரையின் பொருள் அல்ல. ஆயினும் தேவை கருதி ஒன்றிரண்டு கூற வேண்டி உள்ளது. "ஆபஸ்தம்ப தர்ம சூத்திரத்தில்" கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

1. பிராமணனை கோபமாக பேசிய சூத்திரன் நாவை அறுத்துத் துண்டிக்க வேண்டும்.

2. பிராமணனுக்கு ஒப்பாக நடந்த சூத்திரனை சம்மட்டியால் அடிக்க வேண்டும்.

3. சூத்திரன் திருடினால் அவன் சொத்துக்களை பறிமுதல் செய்து கொல்ல வேண்டும்.

4. வேதம் கேட்ட சூத்திரன் காதில் ஈயத்தையும் அரக்கையும் காய்ச்சி ஊற்ற வேண்டும். வேதத்தை உச்சரித்த சூத்திரன் நாவைத் துண்டிக்க வேண்டும்.

5. ஆரியப் பெண்ணை சூத்திரன் இம்சித்தால் அவனுடைய ஆண் குறியைத் துண்டித்து அவனுடைய சொத்துக்களை கைப்பற்றி அவனைக் கொல்ல வேண்டும்.

6. சூத்திரனை குறை சொன்னால் பிராமணனுக்கு எவ்வித தண்டனையும் கொடுக்கக் கூடாது.

7. பிராமணன் திருடினால் அவனுடைய கண்கள் இரண்டையும் கட்டி வெறுமனே விட்டு விட வேண்டும்.

மேலும் 'மனுஸ்மிருதி' கூறுகிறது.

"மூடமான ஒரு அற்ப சாதி பிராமணன் நாட்டில் நீதி பரிபாலனம் செய்தாலும் தவறில்லை. ஆனால் அதே சமயத்தில் சிறந்தவனும் படித்தவனுமாக இருந்தாலும்



படிப்பகம்

www.padippakam.com

ஒரு சூத்திரன் நீதிபரிபாலனம் நடத்தும் சூழ்நிலைக்கு உள்ளான ஒரு நாடு சேறில் புதையுண்ட பசுவைப்போல் கேடு சூழ்ந்ததாகிவிடும்."

## நால்வர்ணம்: குண அடிப்படையா?

இவையெல்லாம் மென்மையான பாகங்கள் இதைவிட கொடுமைகள் மனு தர்மத்தில் வர்ண தர்மத்தில் உண்டு. பெயர் வைப்பது–திருமணம் செய்வது–குடியிருப்பது–உடை உடுத்துவது–உண்பது–உட்பட சகலத்திலும் கொடுமையான–பாரபட்சம் தண்டனையிலும் அப்படியே. இவற்றை வெறுமே அரச கட்டளை என்றால் கலகம் வருவது தவிர்க்க முடியாதது. எனவே இதை ஆண்டவனே செய்வித்தார். இதைப் பற்றி ஒழுகுமாறு ஆண்டவனே கட்டளை இடுகிறார் என்று கூறினால் மக்கள் கேள்வி முறையின்றி ஏற்றுக் கொள்வார்கள் இல்லையா?

பகவத் கீதை அந்த "திருப்பணியை"த்தான் செய்தது.

**"சாதுர் வர்ணயம் மாயாஸ்ருஷ்டம்**
**குண க்ரம வியாகஸ**
**தஸ்ய கர்த்தாரமபி மாம் வித்யகர்த்தா ரமவ்யயம்"**

**"குணத்துக்கும் செய்கைக்கும் தக்கபடி நானே நான்கு வர்ணங்களை சமைத்தேன். செய்கையற்றவனும் அழிவற்றவனுமான யானே அவற்றை செய்தேனென்று உணர்"**

**(கீதை 4.13)**

இந்த சுலோகத்தை மேற்கோள் காட்டி நாலு வர்ணம் குணம் என்பது சாதி அடிப்படையில் பிரிக்கப்படவில்லை. மாறாதது இல்லை. ஒவ்வொருவருடைய குணம், செய்கை, இவற்றினையொட்டியே அமையும் என்று தற்போது இந்துத்துவாவாதிகள் வாதிடுகின்றனர். ஆர்.எஸ்.எஸ். வெளியீடுகளில் இதைக்காணலாம். "வர்ணாஸ்ரமம் என்றால் என்ன?" என்கிற சிறு பிரசுரம் ஆர்.எஸ்.எஸ். கூட்டத்தால் பரவலாக விநியோகிக்கப்படுகிறது. அதில் மேற்கண்ட வாதம் மேலோங்கி உள்ளது. ஆயினும் ராமரும் கிருஷ்ணரும் வேறு நிறத்தவராக இருந்தாலும் வேறு அவதாரம் எடுத்தாலும் பிராமணர்களாகவே கருத வேண்டும் என்று அந்த நூலில் வாதிட்டு தமது மேலாதிக்க புத்தியை நிலைநிறுத்தி விட்டனர்.

ஆகவே கீதையில் கூறப்பட்டதற்கு அப்படிப்பட்ட பொருள் கூறுவது சரியுமல்ல நியாயமும் அல்ல. அதற்கு கீதையே சாட்சியும் கூட.

**"ஓம் தத் ஸ்திதி நிர்தேஸா**
**ப்ரஹ் மணஸ்த்ரி விதஸ்ம்ருத**


படிப்பகம்

www.padippakam.com

**ப்ராஹ்மணஸ் தேந வேதாஸச்**
**யஜ்ஞானச விஹிதா புரா**

**(கீதை 17.23)**

" 'ஓம் தத் ஸத்' என்ற மும்மைப் பெயர்களும் பிரம்மத்தை குறிப்பதென்பர். அதனால் முன்பு பிராமணங்களும் வேதங்களும் வேள்விகளும் என்னால் வகுக்கப் பட்டன"

## கீதையின் சாதி வெறி

**"ப்ராஹ்மண ஷத்ரியவிஸாம் ஸத்ராஹாம்ச பரந்தப**
**கர்மாணி ப்ரவிபக்தா நி ஸ்வபாவப்ரபனவர்குணை**

**(கீதை 18.41)**

"பரந்தாமா, பிராமணர், ஷத்திரியர், வைசியர் இவர்களுடைய தொழில்கள் அவரவர் இயல்பில் விளையும் குணங்களின் படியும் வகுப்புற்றனவாம்"

மேற்கண்ட சுலோகங்கள் கீதையின் வர்ணாஸ்ரம பற்றைக் காட்டும்.

"ப்ராஹ்மண ஷத்ரிய விஸாம்" என்ற பதம் ஒரு சிக்கலான பதம். கீதை 18வது அத்தியாயம் 41வது சுலோகத்தில் வருகிறது. கி. வீரமணியின் நூலிலும் "பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர" என்ற பொருள் உள்ளது.

பாரதியின் பகவத் கீதையிலும் அப்படித்தான் உள்ளது. ஆனால் ஜோசப் இடமருகு கீழ்கண்டவாறு கேட்பது குறிப்பிடத்தக்கது.

"இந்த சுலோகத்திற்கு சங்கராச்சாரியர் எழுதிய பாஷ்யம் சாதி வேறுபாடு சூத்திரனை எவ்வளவு தூரம் தரம் தாழ்த்தியுள்ளது என்று தெளிவாகக் காட்டு கின்றது. ப்ராஹ்மண ஷத்திரிய விஸாம் என்ற பதத்துடன் 'சூத்ர' என்பதை சேர்க்கா மல் தனியாக நிறுத்தி இருப்பதன் காரணம் சூத்திரனுக்கு த்விஜத்வமும் (உபநயன கலாச்சாரம்) வேதம் படிக்கும் உரிமையும் இல்லாததுதான் என்று அவர் தெளிவாகக் கூறியுள்ளார். சூத்திரன் என்ற சொல்லுக்குக் கூட தீண்டாமையை கற்பிக்கின்ற கீதாசிரியரைவிட சாதி வெறியன் வேறு யார் உளர்?"

**(பகவத் கீதை –ஓர் ஆய்வு–ஜோசப் இடமருகு பக்கம் 87)**

இதை இங்கு நாம் சுட்டிக் காட்டக் காரணம் உண்டு. பகவத் கீதை மிகவும் நுட்பமாக தேர்ந்தெடுத்த சொற்களால் புனையப்பட்டது. ஒவ்வொன்றும் கவனமாக வர்ணாஸ்ரம தர்மத்தை நிலைநாட்ட ஏற்படுத்தப்பட்டவையே.

*(அடுத்த இதழில் முடியும்)*



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

Licenced to Post Without Pre-payment/No: 27 Regd. No: TN/MA(C)/193/99

MARXIST

படிப்பகம்